## உள்ளே உள்ளவை


1. செயலைப் பறையடிக்காதே 11
2. அடக்கமாயிரு! 13
3. பதவி வேண்டாம்! 20
4. பதவி என்றால் என்ன? 22
5. மதிப்பில் ஒரு கண் 26
6. உண்மையான சிறப்பு 44
7. புகழுக்குரிய பதவி 53
8. மூல காரணங்கள் 59
9. பதவிக்கு மருந்து 65
10. சிகிச்சை முறை 75
11. இழிவை வெறுக்காதே! 81
12. மக்களின் மனப்பான்மை 85


# பதவி மோகம்

மறைவானவற்றை அறியும் பேரறிஞனே! உள்ளத்தின் மர்மங்களை அறியும் வல்லவனே! புகழனைத்தும் உனக்கே உரித்தாகட்டும்! நீ பெருங் குற்றங்களையும் மன்னித் தருளும் மாமன்னன். உள்ளத்தின் அடித்தளத்தில் மறைந்து கிடக்கும் நுண்ணிய எண்ணங்களையும் கண்டறிபவன். முகஸ்துதி, பதவி மோகம் முதலிய துர்நாற்றம் கலக்காத பரிசுத்தமான செயல்களையே நீ ஒப்புக்கொள்கிறாய். நீ தனித்த பேரரசன்; இணையற்ற ஏகன்.

அண்ணல் நபியவர்கள் கூறியிருக்கிறார்கள்: ''முகஸ்துதி, மனத்தின் ஆழத்தில் நெளியும் மெல்லிய சபல எண்ணம் ஆகிய இரண்டும் என் சமூகத்தவரின் விஷயத்தில் பயங்கரமானவை. அவை குறித்து நான் அச்சமுறுகிறேன். முகஸ்துதி மிகவும் நுட்பானது. அதன் உருவத்தை எல்லாச் சமயங்களிலும் தெளிவாகப் பார்க்க முடியாது. கொடிய இருள் சூழ்ந்த இரவில் கறுப்பக்கல் ஒன்றின்மீது ஊர்ந்து திரியும் கறுப்புச் சிற்றெரும்புபோல், இந்த உணர்ச்சி உள்ளத்தின் அடித்தளத்தில் ஊர்ந்து திரியும்!''

எனவேதான் இதனால் ஏற்படும் விளைவைப் பண்பட்ட அறிஞர்களாலும் உணர்ந்து கொள்ள முடியவில்லை. அறிஞர்களின் நிலையே இப்படி என்றால் பாமரர்களைப் பற்றிக் கேட்க வேண்டியதே இல்லை. மனத்தால் விளையும் கடைசித் தீங்குதான் இவ்வுணர்ச்சி.

இதில் அறிஞர்களே தவறிவிட்டார்கள் என்று குறிப்பிட்டேன். அறிஞர்களைப் போலவே இறைவணக்கத்திற்காகத் தீவிரமாகச் செயலாற்றும் பக்தர்களும் தவறிவிட்டார்கள். அவர்களின் உள்ளங்களில் முகஸ்துதி தன் முத்திரையை ஆழமாகப் பதித்துவிட்டது.

இதற்குக் காரணமுண்டு. இவர்கள் உள்ளத்தையும் உணர்ச்சியையும் பலவந்தமாக அடக்கியாள்கிறார்கள். காம உணர்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார்கள். அதில் சந்தேகங்களையும் குழப்பங்களையும் நுழையவிடாமல் தடுத்து, அதைப் பலதரப்பட்ட வணக்கங்களில் ஈடுபடுத்துகிறார்கள். இதனால் அவர்களின் உள்ளம் பகிரங்கமான தவறுகளைச் செய்யும் துணிவை இழந்துவிடுகிறது.

எனவே, பண்பட்ட இந்த உள்ளம் வேறொரு வகையில் இன்பம் காண்கிறது. தன் நற்செயலையும் தன் அறிவாற்றலையும் வெளியிட்டு ஆனந்தமடைகிறது. இதனால் இறை வணக்கத்திலும் நல்வழியிலும் அதற்கு ஏற்பட்ட சிரமம் ஆனந்தமாக மாறுகிறது. தன்னை மக்கள் விரும்ப வேண்டும், தன்னை எல்லாரும் மதிப்புடன் பார்க்க வேண்டும், மரியாதை செலுத்தவேண்டும் என்று அது விரும்புகிறது. எனவே தான் செய்து வரும் நற்காரியங்களை விளம்பரப்படுத்தகிறது. தன் செயலை - புகழுக்குரிய நற்காரியங்களை இறைவன் ஒருவன் அறிந்திருப்பது மட்டும் போதாது. அவற்றை மக்களும் அறியவேண்டும் என்ற எண்ணம் துளிர்க்கிறது. இதனால் அந்த உள்ளம் மக்களின் பாராட்டுரையைக் கேட்டு இன்பமடைகிறது. இறைவன் ஒருவன் பாராட்டுவது மட்டும் அதற்குப் போதாது!



காமத்திற்குத் தான் போட்டிருக்கும் தடை, இறை வணக்கத்திற்காகத் தான் அனுபவிக்கும் சிரமங்கள் முதலியவற்றை மக்கள் அறிந்தால் தன்னை இன்னும் ஒரு படி அதிகமாகப் பாராட்டுவார்கள் என்று அந்த உள்ளத்திற்குத் தெரியும்.

இது மட்டும்தானா மக்கள் செய்வார்கள்? இல்லை, இல்லை! பெருமதிப்பளிப்பார்கள். தன்னோடு உறவாடுவதையும் தன்னைச் சந்தித்துப் பேசுவதையும் கிடைத்தற்கரிய பேறுகள் என்று கருதுவார்கள்; தான் கேட்கும் பிரார்த்தனைக்காகத் தவம் கிடப்பார்கள்; தன் கருத்தை - அபிப்ராயத்தைச் செயல் படுத்துவார்கள்; தனக்குப் பணிவிடை புரிவதற்கும் 'சலாம்' சொல்வதற்கும் போட்டி போடுவார்கள்; சபைகளில் பெரிய மரியாதை செய்வார்கள்; பலர் கூடும் இடங்களில் முதலிடம் தருவார்கள்; உணவு, உடை முதலியவற்றைக் காலடியில் கொணர்ந்து குவிப்பார்கள்; அடி பணிந்து பணி புரிவார்கள்.

இவற்றை எல்லாம் அந்த உள்ளம் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறது. இவற்றை எல்லாம் அது முழு மனதுடன் வரவேற்கிறது. உலகிலுள்ள சகலவற்றையும்விட அதிகமாக இவற்றை அது விரும்புகிறது.

இத்தகைய பலாபலன்களை எண்ணிப் பார்க்கும்போது ஒரு மனிதனால் காம உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியும். குற்றங்களை விட்டும் விலகியிருக்க முடியும்.

இறை வணக்கத்திலேயே மூழ்கியிருப்பதும் சாத்தியமே. ஏனெனில், இவற்றினால் ஏற்படும் பெருமதிப்பையும் கௌரவத்தையும் அவன் மனப்பூர்வமாக வரவேற்கிறான்.

அவன் எண்ணுகிறான்: ''என் வாணாள் முழுதும் இறை பணியிலேயே செலவாகிறது.'' இல்லை; அவன் வாழ்க்கை அப்படியில்லை. மனத்தில் நெளிவும் இந்தச் சபல எண்ணத்திற்குத்தான் அவன் தன் ஆயுள் முழுவதையும் செலவிடுகிறான். அது மிகவும் நுண்ணிய ஆவல். அறிவுப்பலம் படைத்த அறிஞர்கள்கூட அது விஷயத்தில் குருடர்களாகி விட்டார்களே.

அவன் நினைக்கிறான், 'நான் இறை வழிபாட்டிலே கலப்பற்ற எண்ணத்தோடு செயலாற்றுகிறேன்' என்றும், 'இறைவன் தடுத்தவற்றை ஒதுக்கிவிட்டு நேர்மையான வழியில் நான் நடக்கிறேன்' என்றும் தனக்குத் தானே சொல்லிக்கொள்கிறான். ஆனால் அவன் மனம் அவனுக்கே துரோகம் செய்கிறது. அது தனக்குள் மறைத்துக் கொண் டிருப்பது என்ன? பதவி, அந்தஸ்து, மரியாதை முதலிய வற்றை அது தனக்குள் மூடி வைத்திருக்கிறது. ஆம், அவன் மக்களுக்காகவே இவற்றை எல்லாம் செய்கிறான். அவற்றால் மக்கள் திரளில் தனக்குக் கிடைக்கும் அந்தஸ்தை- பதவியை எண்ணியே அவன் செயலாற்று கிறான்.

இந்தச் சபல எண்ணத்தின் காரணமாக அவன் செய்த நற்காரியங்கள் அனைத்தும் அழிந்துவிட்டன. அவற்றிற் குரிய நன்மைகள் பாழாகி விட்டன. அவன் பெயர் நயவஞ்சகர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டு விட்டது. தனக்கு இறைவனிடத்தில் மதிப்பிடம் உண்டு என்று அவன் எண்ணிக் கொண்டிருக்கிறான். இது தவறு! அவன் உள்ளமே அவனுக்குச் சதி செய்கிறது.



அந்தச் சதியில் அவன் சரியாக அகப்பட்டுக் கொண்டு விட்டான். உத்தமர்களைத் தவிர்த்து மற்றவர்களால் இந்தச் சதியிலிருந்து தப்பமுடியாது. இது பயங்கரமானதொரு பள்ளத்தாக்கு. இதிலிருந்து தப்பியோடி வெளியேறியவர் கள் இறையண்மையைப் பெற்ற மேதைகளே. எனவே தான், ''உத்தமர்களின் உள்ளத்தை விட்டுக் கடைசியாக வெளியேறக் கூடியது தலைமைத்தன எண்ணம்'' என்ற முதுமொழி வழக்கிலிருந்து வருகிறது.

இவ்வாறு பதவிமோகம் அவர்களின் உள்ளத்திலிருந்து விடைபெற்று வெளியேறிய பின்னர் அவர்கள் கலப்பற்ற உத்தமர்களாகி விடுவார்கள். முகஸ்துதி என்பது உள்ளத்தையும் உடலையும் ஒருங்கே பாதிக்கும் கொடிய வியாதி; ஷைத்தானின் வலை.

இதற்குக் காரணம் என்ன? இதன் அந்தரங்கம் என்ன? இதன் படித்தரங்கள், பிரிவுகள் யாவை? இதை அகற்று வதற்குரிய முறை என்ன? இவற்றை எல்லாம் முறையே ஆராய வேண்டிய தேவை இப்போது ஏற்படுகிறது.

இந்நூல் இரு பிரிவுகளைக் கொண்டது. மேற்குறிப் பிட்ட ஆராய்ச்சிக்காக இரண்டாவது பிரிவை ஒதுக்கியிருக் கிறோம். முதல் பிரிவை இதோ எழுதத் தொடங்குகிறேன். இந்தப் பிரிவில் பதவி மோகம், பிரபலமடைய ஆர்வம் முதலியவற்றை விளக்கப் போகிறேன். பிரபலத்தின் இழிவு, அடக்கத்தின் சிறப்பு, பதவியின் சீரழிவு, அதன் அந்தரங்கம் முதலியவற்றைப் படிப்படியாக ஆராய்வோம்.

மக்கள் பொருள்களைவிட அதிகமாகப் பதவியை ஏன் விரும்புகிறார்கள்? பதவி என்பது உண்மையிலேயே சிறப் பம்சம் தானா? புகழுக்குரிய பதவி எது? நிந்தனைக்குரிய பதவி எது? மனிதன் பாராட்டை விரும்புவதும் நிந்த னையை வெறுப்பதும் ஏன்? இவற்றிற்கெல்லாம் எப்படிப் பரிகாரம் செய்வது? இவற்றை எல்லாம் தொடர்ந்து ஆராய்வோம். இதில் பன்னிரண்டு அத்தியாயங்கள் இருக் கின்றன. அவற்றின் உதவியால் பதவிமோகம், அந்தஸ் தார்வம் முதலியவற்றின் முழு உருவத்தையும் உன்னால் அறிந்து கொள்ளமுடியும்.

இறைவனே நேர்மைக்கு வழி வகுப்பவன். அவன் அன்பிலும் அருளிலும் நிகரற்றவன்.

❑ ● ❑

# 1. செயலைப் பறையடிக்காதே!

நான் சொல்லப்போகும் கருத்துக்களை நன்கு கவனித் துக் கொள்! இறைவன் உனக்கு நேர்மையான எண்ணத்தை யும் தூய்மையான செயல்களையும் தந்தருள்வானாக!

பதவி மோகம் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணம் தன் செயலைப் பிரபல்யப்படுத்தும் மனப்பான்மைதான். இந்த மனப்பான்மையின் விளைவால்தான் பதவி மோகம், அந்தஸ்துப் பிரியம் எல்லாம் உண்டாகின்றன. தன் செயலைப் பிரபலப்படுத்தாமல் அடக்கத்தோடிருப்பதுதான் விரும்பப்படுவது, புகழுக்குரியது. சிலர் பிரபலமடைந் திருக்கிறார்கள். மார்க்கத்தைப் பரப்புவதற்காக, அவர்களுக்கு இறைவன் பிரபல்யத்தை அளித்தான். ஆனால் அதற்காக அவர்கள் சிறிதும் முனையவில்லை.

திருநபியவர்கள் கூறினார்கள்: ''மக்கள் சுட்டிக்காட்டிப் பேசும் அளவிற்கு ஒருவன் மார்க்க விஷயத்திலும் உலகி யல் விவகாரத்திலும் பிரபலமடைந்து விட்டால் அது ஒன்றே அவனுக்குப் போதிய தீங்குகளை விளைவித்து விடும். இதிலிருந்து தப்பியவர்கள் மிகச் சிலர்.''

''அபூசயீத்! உம்மை மக்கள் காணும்போதெல்லாம் உம்மைச் சுட்டிக் காட்டுகிறார்கள்'' என்று ஒருவர் கூறினார்.

அபூசயீத் விடையிறுத்தார்; ''இருக்கலாம். ஆனால் என்னைச் சுட்டிக் காட்டி அவர்கள் என்னைப் பாராட்டி

யிருக்க மாட்டார்கள். மார்க்கத்தில் விபரீதத்தை உண்டாக்கு பவன், பெரும் பாவி என்று என்னை நிந்தித்திருப்பார்கள்.''

அறிஞர் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்: ''தாராள மாகத் தர்மம் செய்! ஆனால் அதைப் பறையடிக்காதே! மக்களின் மத்தியில் உன் அந்தஸ்த்தை உயர்த்த விரும் பாதே! கல்வியைக் கற்றுக்கொள்! வாய்மூடி மௌனியாக இரு! இப்படி எல்லாம் இருந்தால் நீ வெற்றி காண்பாய். நல்ல வர்களை ஆனந்தப்படுத்து! தீயவர்களைக் கோபப்படுத்து!''

காலித்பின் மஃதான் அவர்களைப் பற்றிய குறிப்பு ஒன்று உண்டு. தம்மைச் சுற்றிலும் அமர்ந்திருக்கும் அன்பர் களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டால் அவர்கள் எழுந்து போய் விடுவார்களாம்! எங்கே பிரபல்யம் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் அவர்களுக்கு.

மூன்று பேர்களுக்கு மேல் அதிகமான எண்ணிக்கை கொண்ட கூட்டத்தில் அபுல் ஆலிய்யா அவர்கள் அமர்வதே யில்லையாம்.

''என் பெயர் ஜாமிஆபள்ளிவரை போய்விட்டதே!'' என்று கூறி ஓர் அறிஞர் அழுதாராம்.

''பிரபல்யமடைய எண்ணுபவர்கள் கடைசியில் கேவ லமே அடைகிறார்கள். இந்த நியதிக்கு மாறுபட்ட எந்த மனி தனையும் நான் காணவில்லை!'' என்று பஷர் கூறுகிறார்.

இதே அறிஞர் மீண்டும் கூறுகிறார்: ''தன்னை மக்கள் அனைவரும் அறியவேண்டும் என்று விரும்பும் ஒரு மனிதனால் மறுமையின் சுவையை உணர முடியாது!''

❑ ● ❑

## 2. அடக்கமாக இரு!

''இறைவனிடம், 'வல்லவனே! எனக்குச் சுவன பாக்கியத்தை தந்தருள்' என்று கேட்டால் அவன் அதை அவசியம் தருவான். ஆனால் அவன் கேட்டதைத் தவிர்த்து வேறு எதையும் கொடுக்கமாட்டான்!'' என்று அண்ணல வர்கள் கூறியுள்ளார்கள்.

மீண்டும் கூறினார்கள்: ''சுவனத்திலிருப்பவர்களைப் பற்றி நான் உங்களுக்குக் கூறட்டுமா? அவர்கள் பலவீனர் கள்; சக்தியிழந்தர்கள், இறைவன்மீது ஆணையிடப்பட் டால் அவர்கள் விலகிக்கொள்வார்கள். நரகத்திலிருப்ப வர்கள் நேர் எதிரானவர்கள். அவர்கள் பெருமை கொண்டவர்கள்; அகங்காரம் கொண்டவர்கள்.''

மீண்டும் அருளினார்கள்: ''என் சமூகத்தவரில் ஒருவன். அவனிடம் சென்று நீங்கள் தங்கக் காசு கேளுங்கள்! கொடுக்க மாட்டான். ஒரு வெள்ளி நாணயமாவது கேட்டுப் பாருங்கள்! அதுவும் கொடுக்க மாட்டான். செப்பாலடித்த நாணயத்தைத்தான் கேளுங்களேன். அதைக் கொடுப்பதற் குக் கூட அவனுக்கு மனம் வராது. ஆனால் அவன்

இறைவனிடம் சுவனத்தைக் கேட்டால் இறைவன் அதைத் தரத் தயாராயிருக்கிறான். அந்த இறைவனுக்காக அவன் இவ்வுலக இன்பங்களில் ஒரு சிறு துரும்பையும் தரத் தயாராயில்லை!''

ஒரு நாள் உமர் (ரலி) அவர்கள் பள்ளியில் நுழைந்த போது மஆத்பின் ஜபல் (ரலி) அவர்களைக் கண்டார்கள். அவர்கள் திருநபியவர்களின் அடக்கவிடத்தின்முன் நின்று கொண்டு விம்பிக் கொண்டிருந்தார்கள்.

''மஆத்! ஏன் அழுகிறீர்?'' என்று உமர் கேட்டார்கள்.

மஆத், நிமிர்ந்து பார்த்தார். ''உமர்! நான் கேட்டிருக் கிறேன், மிகச் சிறிய அளவில் முகஸ்துதி செய்வதும் இணை வைப்பதற்கு ஒப்பான காரியமாகும்'' என்று நபியவர்கள் கூறியிருக்கிறார்கள். இறையச்சம் பூண்ட உத்தமர்களை இறைவன் விரும்புகிறான். அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து மறைந்துபோய் விட்டாலும் அவர்கள் அழிந்துவிடவில்லை. அவர்கள் நேரிலே வந்தாலும் தங்கள் உள்ளத்தைத் திறந்து காட்டுவதில்லை. அவர்கள் நேர்வழிச் சுடர்கள். கொடிய இருளிலும் அவர்கள் வழி காட்டு கிறார்கள்!''

முஹம்மத் பின் சுவைத் அவர்கள் கண்கூடாகக் கண்ட சம்பவம் ஒன்றை விளக்குகிறார்.

மதீனா நகர் வரண்டுபோய்விட்டது. மக்கள் மழைக்காக இறைஞ்சினார்கள். அவர்களில் நல்ல மனிதர் ஒருவர் இருந்தார். அவரை 'மஸ்ஜித் நபவி'யிலுள்ள யாரும் பொருட்படுத்துவதில்லை. மக்கள் கையேந்தி பிரார்த் திக்கும்போது அவர் வந்தார். உக்கி உலுத்துப்போன பழைய துணியை அவர் அணிந்திருந்தார். சுருக்கமாக



இரண்டு 'ரகஅத்' தொழுதார். பின்னர் கரங்களிரண்டையும் உயர்த்தி இறைஞ்சினார். ''இறைவனே! உன்மீது ஆணையிட்டுவிட்டேன். நீ இந்த நேரமே எங்களுக்கு மழையை இறக்கியருள்வாயாக!'' என்று முறையிட்டார்.

அவர் ஏந்திய கரத்தைத் தணிக்கவில்லை. அவர் முறை யீடும் முடியவில்லை - விண் திரையில் கருமுகிற்கூட்டம் மிதக்க ஆரம்பித்துவிட்டது. பின்னர் பலமான மழை! மதீனா நகர் மூழ்கிவிடுமோ என்று அலறும் அளவிற்கு மழை கொட்ட ஆரம்பித்துவிட்டது.

அந்த நல்லடியார் மீண்டும் முறையிட்டார். ''இறை வனே! இந்த மழை மக்களுக்குப் போதுமானது என்று நீ கருதினால் இத்துடன் மழையை நிறுத்திவிடு!'' என்று. மறுகணம் மழை நின்றுவிட்டது. மக்கள் ஆச்சரியத்தில் மிதந்தார்கள்.

அவர்களில் ஒருவர் துணிந்து கேட்டார்: ''இத்துணை சக்தி உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?''

அந்த நல்லடியார் சிரித்தார்.

''நான் இறைவனுக்கு வழிபட்டேன். அவன் கட்டளை களை நிறைவேற்றினேன். அவன் தடுத்தவற்றை ஒதுக்கி னேன். அவனிடம் இப்போது முறையிட்டேன். அவன் என் முறையீட்டைத் தீர்த்து வைத்தான். இதிலென்ன விந்தை?''

இப்னு மஸ்ஊத் கூறுகிறார்கள். ''நீங்கள் அறிவின் ஊற்றாகவும் நேர்வழியின் சுடராகவும் இருங்கள்! வீட்டிற்கு அணிகலனாகவும் இரவிற்கு ஒளியாகவும் திகழுங்கள்! தூய சிந்தனையுடையவர்களாகவும் பழைய ஆடைகளை அணிபவர்களாகவும் இருங்கள்! வானவர்களால் நீங்கள்

அறியப்படுவீர்கள்; பாராட்டப்படுவீர்கள். மண்ணக மக்களை விட்டு மறைந்திருங்கள்! அவர்களின் பாராட்டை எதிர்பார்க்காதீர்கள், விரும்பாதீர்கள்!''

அண்ணலவர்கள் கூறினார்கள்: ''என் அன்பர்களிலேயே ஒரு மனிதனை நான் பெரிதும் விரும்புகிறேன். அவன் உடல் வலிமை குன்றியவன்; இறை வணக்கத்தில் கணிசமான அளவிற்குக் கவனம் செலுத்துபவன். மர்மமாகவே அவன் இறைவனை வணங்குவான். மக்களில் மறைந்து போயிருப்பான். அவனை அதிகமாக யாருக்கும் தெரியாது. அவனைப் பெரும்பாலோர் அறிந்திருக்க மாட்டார்கள்; அவனைச் சுட்டிக் காட்டி யாரும் பாராட்ட மாட்டார்கள். இந்த நிலைமையில் அவன் பொறுமையோடு செயலாற்றுவான்!''

''எளிய மக்களே இறைவனுக்கு மிகவும் நெருங்கியவர்கள்'' என்று இப்னு உமர் கூறினார்கள்.

''யாரை இப்படிக் குறிப்பிடுகிறீர்கள்?'' என்று ஒருவர் கேட்டார்.

''மார்க்கத்தை நல்ல முறையில் பின்பற்றி நடப்பவர்களையே நான் இப்படிக் குறிப்பிடுகிறேன்; அவர்கள் மறுமையில் நபி ஈஸா (அலை) அவர்களுடன் சேர்ந்து அமர்ந்திருப்பார்கள்!''

அடியிற்கண்டவாறு கலீல் பின் அஹ்மத் அவர்கள் பிரார்த்திப்பதுண்டு:

''இறைவனே! உன் சந்நிதானத்தில் என்னை மக்களில் உயர்ந்தவனாய் ஆக்குவாயாக! என் அபிப்பிராயத்தில் என்னை அற்பமானவனாக ஆக்குவாயாக! மக்களின் மத்தியில் என்னைச் சாதாரணமானவனாய் ஆக்குவாயாக!''



''மக்காவிலும், மதீனாவிலும் சொற்ப உணவின் உதவியால் சிரமத்துடன் வாழ்ந்து வந்த ஏழை மக்களிடம் என் உள்ளம் மிகவும் அன்மி உறவாடிற்று'' என்று சுப்யான் ஸௌரீ அவர்கள் கூறுகிறார்கள்.

துறவி இப்ராஹீம் பின் அத்ஹம் கூறினார்கள்: ''என் ஆயுளிலேயே ஒரே ஒரு தடவைதான் நான் மனம் குளிர்ந்து பரவசப்பட்டேன். ஓர் இரவு 'ஷாம்' நாட்டைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் ஒரு பள்ளியில் இருந்தேன். எனக்கோ வயிற்று வலி. வலியின் கொடுமை தாங்காது நான் முணு முணுத்திருக்க வேண்டும். அந்தப் பள்ளியின் 'முஅத்தி'னுக்கு அசாத்தியக் கோபம் வந்துவிட்டது. அவர் என் கால்களைப் பற்றி இழுத்து என்னைப் பள்ளிக்கு வெளியே வீசிவிட்டார். அந்தச் சொற்ப நேரத்தில் என் மனம் பேரின்ப மடைந்தது.''

புலைல் கூறினார்கள்: '' மக்களின் பாராட்டை விட்டு விலகியிருக்க முயற்சி செய், நல்ல முறையில் செயலாற்று! மக்கள் ஏன் உன்னைப் பாராட்டவேண்டும்? ஏன் உன்னை அவர்கள் இகழாதிருக்க வேண்டும்? அவர்கள் பாராட்ட வேண்டாம், தாராளமாக இகழட்டும். இறைவன் உன்னைப் பாராட்டிக் கொண்டிருக்கிறானே, அது போதாதா உனக்கு?''

மேற்குறிப்பிட்ட ஆதாரங்களிலிருந்து பிரபலத்தை எதிர்பார்ப்பது எத்துணை பெரிய தவறு, அடக்கத்தோடு செயலாற்றுவது எத்துணை பெரிய உயர் தன்மை என்று நீ உணர்ந்து கொண்டிருப்பாய் என்று எண்ணுகிறேன். பிரபலத்தின் உதவியால் மனிதன் மக்களின் உள்ளங்களில் மதிப்பையும் அந்தஸ்தையும் பதவியையும் எதிர்பார்க்கிறான். பதவியையும் மதிப்பையும் ஒரு மனிதன் விரும்பிச்

செயலாற்றும் போதுதான் மார்க்கத்திற்கு முரணான பல விபரீதங்கள் நிகழ்கின்றன.

நீ கேட்கலாம்:

''பதவியாலும் பிரபலத்தாலும் பல தீங்குகள் ஏற்படுவதாகக் கூறுகிறீர்கள். ஆனால் இறை தூதர்கள், அரசோச்சிய நான்கு 'கலீபா'க்கள், புகழ் பெற்ற சட்ட மேதைகள் முதலியோர் விஷயத்தில் இது பொருந்தாது. அவர்கள் அடைந்த பிரபலத்தைவிட அதிகமாக வேறு யாரும் அடையவில்லை. அவர்கள் பெற்ற அந்தஸ்தைவிட உயர்ந்ததை வேறு யாரும் பெறவில்லை. இப்படியிருந்தும் அவர்கள் விஷயத்தில் விபரீதம் ஒன்றும் ஏற்படவில்லையே!''

கவனித்துக் கேள்! பிரபலம் என்பதே வெறுப்பிற்கும் இழிவிற்குமுரிய அம்சமல்ல. அதைத் தேடித் திரிவதுதான் இழிவிற்குரிய அம்சம்; வெறுப்பிற்குரிய செயல். மேற் குறிப்பிட்ட அறிஞர்களுக்கு இறைவன்தான் பிரபலத்தை ஏற்படுத்தினான், அந்தஸ்தைக் கொடுத்தான். எனினும் அவற்றிற்காக அவர்கள் ஒரு சிறிதும் முனையவில்லை. தங்களுக்கு அந்தஸ்து வேண்டும் என்று அவர்கள் விரும்பவில்லை. தங்களுக்குப் பிரபலம் ஏற்படவேண்டும் என்று அவர்கள் ஆசைப்படவில்லை.

என்றாலும், இதனால் பலமிழந்த உள்ளம் கொண்டவன் நேர் வழியை இழக்கிறான். வீண் குழப்பத்தை உண்டாக்கிக் கொண்டு தடுமாறுகிறான். நடுக் கடலில் தத்தளிக்கும் பலருக்கு மத்தியில் பலவீனன் ஒருவன் திண்டாடுவது போல இவன் திண்டாடுகிறான். அவன் பலவீனனாயிருப்பதால் அவனால் யாரையும் காப்பாற்ற



முடியாது. தங்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தடுமாறும் மற்றவர்களாலும் அவனைக் காப்பாற்ற முடியாது. அவர்கள் தாம் அலைகளுக்கிடையே அலங் கோலப்படுகிறார்களே!

ஆனால், வலுவான எண்ணமும் பலமான உள்ளமும் கொண்டவன் மேலானவன். அவன் குழப்பமடைய மாட்டான். அவன் முன்னவனைப்போன்று வழி தவறவும் மாட்டான். நடுக் கடலில் தத்தளிக்கும் பலருக்கு மத்தியில் பலசாலி ஒருவனைப்போன்று அவன் செயலாற்றுவான். தன் வலிமையால் மற்றவர்களைக் காப்பாற்றுவான். தன் உயிரையும் காத்துக்கொள்வான். மற்றவர்களைக் காப்பாற்றுவதற்குரிய நன்மையும் அவனுக்குக் கிடைக்கும்.

நன்கு ஆராய்ந்து பார்!

❑ ● ❑

# 3. பதவி வேண்டாம்

இறைவன் கூறுகிறான்: 'உலகில், உயர்வையும் கலகத்தையும் விரும்பாதவர்களுக்கு நாம் மறுமை வாழ்க்கையை அளிப்போம்.''

இந்த வசனத்தில் இறைவன் உயர்வு, கலகம் ஆகிய இரண்டையும் ஒன்று சேர்த்துக் கூறியிருக்கிறான். உயர்வுக்கும் கலகத்துக்குமிடையில் நெருங்கிய சம்பந்தமுண்டு என்பதைச் சூசகமாகக் காண்பிக்கிறான். அதே சமயத்தில் மறுமையில் இவ்விரண்டுமே இல்லை என்று சுட்டிக் காட்டுகிறான்.

மீண்டும் கூறுகிறான்: ''இம்மையையும் அதன் அலங்காரத்தையும் விரும்புபவர்களுக்கு நாம் அவர்களுக்குரிய நற்கூலியை இம்மையிலேயே அளிப்போம். அவர்களுக்கு இம்மையில் நாம் எத்தகைய குறையும் வைக்கமாட்டோம். ஆனால் அவர்களுக்கு மறுமையில் நரக நெருப்பைத் தவிர்த்து வேறொன்றும் கிடையாது. அவர்கள் உலகில் செய்த நற்காரியங்கள் அனைத்தும் வீணாகிவிட்டன; அவர்



கள் புரிந்து வந்த நற்செயல்கள் அனைத்தும் பாழாகி விட்டன.

இந்த வசனத்திலும் பதவி, மதிப்பு, அந்தஸ்து எல்லாம் வன்மையாகத் தாக்கப்படுகின்றன. உலக இன்பங்களில் பதவியும் ஒன்று என்பதை யாரால் மறுக்க முடியும்? உலகின் அலங்காரங்களில் அது மிகவும் உயர்ந்தது என்பதை எப்படி மறுக்க முடியும்?

''பதவி மோகமும் பொருளாசையும் மனிதனின் உள்ளத்தின் நயவஞ்சகத் தன்மையை முளைவிடச் செய்து விடும் - மழைத் தண்ணீர் கீரையை முளைவிடச் செய்வது போல்'' என்று திரு நபியவர்கள் கூறியிருக்கிறார்கள்.

திரு நபியவர்கள் மீண்டும் கூறினார்கள்: '' ஆட்டு மந்தை ஒன்றில் அவிழ்த்துவிடப்பட்ட துஷ்ட ஓநாய்கள் இரண்டு செய்யும் அட்டகாசத்தைவிட அதிகமான விளைவுகளை ஒரு மனிதனின் மதக் கிரியாம்சைகளில் பதவி மோகமும் பொருளாசையும் உண்டாக்கிவிடும்.''

அறிஞர் அலீ(ரலி) அவர்களுக்கு அண்ணலவர்கள் கூறினார்கள்: ''இச்சைக்கு அடிபணிந்ததாலும் மக்களிடமிருந்து பாராட்டை எதிர்பார்த்ததாலும்தான் அநேகர் சீரழிந்து போய்விட்டார்கள்.''

இறைவனே! உன்னிடம் நாங்கள் இறைஞ்சுகிறோம். எங்களுக்கு மன்னிப்பையும் ஆரோக்கியத்தையும் தந்தருள்வாயாக! நீ நிகரற்ற அருளாளன்.

❑ ● ❑

# 4. பதவி என்றால் என்ன?

உலக வாழ்க்கை என்னும் மாளிகைக்குப் பொருளும் மதிப்பும் அத்தியாவசியமான இரண்டு தூண்கள். பொருளை உடைமையாக்கிக் கொண்டு அதன்மீது உரிமையை நிலை நாட்டும்போது அதைச் 'செல்வ நிலை' என்று குறிப்பிடுகிறோம். மனித உள்ளங்களை வசப்படுத்திக்கொண்டு அவற்றின்மீது அதிகாரம் செலுத்தும்போது அதைப் பதவி என்று குறிப்பிடுகிறோம்.

செல்வந்தன் ஒருவன் திரண்ட செல்வத்தை வைத்துக் கொண்டிருக்கிறான். தங்கக் காசுகளுக்கும் வெள்ளி நாணயங்களுக்கும் உரிமையுள்ளவனாயிருக்கிறான். அவன் அவற்றின் உதவியால் தன் காரியங்களைச் சாதித்துக் கொள்கிறான். தன் நோக்கங்கள் நிறைவேறுவதற்கும் தன் தேவைகள் முடிவடைவதற்கும் மற்றக் காரியங்களுக்கும் அவற்றை அவன் பயன்படுத்துகிறான்.

இதேபோன்று மதிப்புள்ள ஒருவன் மக்களின் உள்ளங்களில் தனியிடம் பெற்றிருக்கிறான்; அவற்றைத்



தனக்கு உரிமையாக்கிக் கொண்டிருக்கிறான். இந்தச் செல்வாக்கின் உதவியால் அவன் தன் காரியங்களைச் செவ்வையாக முடித்துக் கொள்கிறான். அந்த உள்ளங்களுக்குரிய மானிடர்களை அவன் கருவிகளாகப் பயன்படுத்துகிறான்.

மனிதன் பொருளை அடைவதற்குப் பலதரப்பட்ட முயற்சிகளில் ஈடுபடுகிறான். பல்வேறுபட்ட வர்த்தகங்களின் உதவியால் அவன் பொருளீட்டுகிறான். இதே போன்று ஒருவன் மக்களின் மதிப்பைப் பெறப் பல்வேறு முயற்சிகள் செய்கிறான்; நற்காரியங்கள் செய்கிறான்; நல் வழியில் நடக்கிறான். இவற்றின் உதவியால் மக்களின் மனத்தைக் கவர முடியும் என்பது அவன் எண்ணம் , உறுதி.

ஓர் உள்ளம் ஒரு மனிதன்மீது மதிப்பு வைப்பதாயிருந்தால் அவனிடம் ஏதேனும் சிறப்பம்சம் கண்டிப்பாய் இருக்கவேண்டும். அந்த அம்சத்தைப் பார்த்துத்தான் அது அவனுக்கு மதிப்பளிக்கும். இப்படி ஓர் உள்ளம் ஒரு மனிதனை மதிக்கும்போது அவனுக்கு அது தலை சாய்க்க ஆரம்பிக்கிறது; அவன் சொற்படி நடக்கத் தொடங்குகிறது.

சிறப்பம்சத்தைப் பார்த்துத்தான் பிறர் மதிப்பளிப்பார்கள் என்று குறிப்பிட்டேனல்லாவா? அது உண்மையிலேயே சிறப்பம்சமாக இருக்க வேண்டியதில்லை. பொது மக்கள் அதைச் சிறப்பம்சம், உயர் குணம் என்று கருதினால் போதும். அவர்களின் அபிப்பிராயத்தில் அது சிறப்பம்சமாக இருந்தால் போதுமானது. ஒன்று மில்லாத ஒரு தன்மையை அவர்கள் உயர் குணம் என்று கருதுவதுண்டு. அப்போதும் அவர்கள் அந்தக் குணவானுக்கு மதிப்பளிக்கத்தான் செய்வார்கள். இதற்குக் காரணமுண்டு. உள்ளம்தான்

எதற்கும் மூலம். அதற்கு மனிதன் கட்டுப்பட்டவன். அந்த உள்ளத்தில் ஒரு மனிதனைப் பற்றிய நல்லெண்ணம், நல்லபிப்பிராயம் ஏற்பட்டுவிட்டால் அவனை அது மதிக்க ஆரம்பித்துவிடும். அவனுக்கு அடிபணிந்து நடக்கவும் அது தயாராகிவிடும். இது உலக நியதி.

செல்வந்தன் அடிமைகளையும் பணியாட்களையும் ஏற்படுத்தித் தனக்கு வேண்டிய வேலைகளை முடித்துக் கொள்கிறான். இதுபோலவே மதிப்புள்ளவன் தன்னை மதித்த சகலரையும் பயன்பத்தித் தனக்கு வேண்டிய காரியங்களை முடித்துக் கொள்கிறான். பணக்காரன் அடிமைகளைத்தான் - பணியாட்களைத்தான் பயன்படுத்து கிறான். பூரண உரிமையுள்ளவர்களைப் பற்றி அவன் கவலைப்படுவதில்லை. ஆனால், மதிப்புள்ளவன் பூரண உரிமையுள்ளவர்களையும் பலவந்தமாகத் தனக்குப் பணிய வைக்கிறான்; பெரிய மனிதர்களெல்லாம் தனக்குத் தலை வணங்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறான்.

இதிலிருந்து என்ன அறிகிறாய்? பதவி என்றால் உள்ளத்தில் தனியிடம், மதிப்பிடம் பெறுவதுதான் என்று உணர்கிறாயல்லவா? மக்கள் ஒரு மனிதனை எந்த அளவுக்கு மதிக்கிறார்களோ அந்த அளவுக்கு அவர்கள்மீது அவன் ஆட்சி செலுத்துவான். அவன் மதிப்பு, மக்களின் உள்ளங்களில் அதிகரிக்க அதிகரிக்க அவன் மகிழ்ச்சி அதிகரிக்கும்; அவன் பதவி மோகம் விரிவடையும். இதுதான் பதவிக்குரிய பொருள்; அதன் அந்தரங்கம்.

இந்தப் பதவியால் அவனுக்குப் பல நன்மைகள் விளை கின்றன. அவனைப் பலர் பாராட்டுவார்கள்; புகழ்வார்கள்.



ஏனெனில், குறிப்பிட்ட குணத்திற்காக ஒரு மனிதனை மதிக்கும் போது அந்தக் குணத்தைப் பறையடிக்காதிருப்பது மதிப்பளித்தவன் விஷயத்தில் சாத்தியமில்லை. எனவே அந்தக் குணத்திற்குரிய மனிதனை அவன் பாராட்டத்தான் செய்வான். மக்கள் அவனுக்குப் பணிவிடை செய்வார்கள்; தேவையான உதவி அளிப்பார்கள்; எதற்கும் அவனையே தேர்ந்தெடுப்பார்கள். அவனுக்கு எதிரில் யாரும் தர்க்கம் பண்ணமாட்டார்கள்; பெருமதிப்பளிப்பார்கள்; முந்திக் கொண்டு ‘சலாம்’ சொல்வார்கள்; சபைகளில் முதலிடம் தருவார்கள்.

இவை அனைத்தும் உள்ளத்தில் ஏற்படும் மதிப்பால் விளைபவை. நற்பண்புகளைக் கண்ட உள்ளம் அவற்றிற் குரிய மனிதனுக்கு அடிமையாகி விடுகிறது. இந்த நற்பண்பு சில சமயங்களில் அறிவாலோ, வணக்கத்தாலோ ஏற்பட லாம். நல்லவன் என்ற காரணத்தால் மக்கள் ஒரு மனிதனை மதிக்கலாம். பக்தியுள்ளவன் என்ற காரணத்தால் மற்றவ னுக்கு அவர்கள் பெருமையளிக்கக் கூடும். உயர்குலம், அழகிய தோற்றம், உடல் வலிமை முதலிய தன்மைகளா லும் இத்தகைய மதிப்பு ஏற்படுவதுண்டு. இவை ஒவ் வொன்றுக்கும் உள்ளத்தில் இடமுண்டு. இவற்றின் காரண மாக ஒரு மனிதனின் உள்ளத்தில் மற்றொருவனின் பதவியா சனம் நிறுவப்படுகிறது.

இறைவனே எல்லாவற்றையும் நன்கு அறிந்தவன். அவன் பேரறிஞன்.

❑ ● ❑

# 5. மதிப்பில் ஒரு கண்

மதிப்பையும் மரியாதையையும் விரும்பாதவர்கள் யார்? ஒவ்வோர் உள்ளமும் இவற்றில் ஒரு கண் வைக்கத் தான் செய்கிறது. பதவி மோகம், மதிப்பார்வம் இல்லாத உள்ளத்தைக் காண்பது மிகவும் சிரமம். இதற்குக் காரண மென்ன? மக்கள் அனைவரும் மதிப்பை ஏன் விரும்ப வேண்டும்? அப்படி அவர்களை அதன்பால் உந்தித் தள்ளுவது எது? எதன் காரணமாக மனிதன் தங்கத்தையும் வெள்ளியையும் மற்றச் செல்வ வகைகளையும் விரும்பு கின்றானோ, அதன் காரணமாகவே அவன் பதவியையும் அந்தஸ்தையும் விரும்புகிறான். ஆனால் அவன் செல் வத்தைவிட அதிகமாக மதிப்பைத்தான் விரும்புகிறான், வெள்ளியைவிட அதிகமாகத் தங்கத்தை விரும்புவதுபோல்! இவ்விரண்டையும் அவன் வரவேற்றாலும், தங்கத்தின் மீது அவனுக்குள்ள மோகம் வெள்ளியின்மீது அவனுக்குள்ள மோகத்தைவிட அதிகம்தான். இவ்விரண்டையும் ஒரே அளவில் கொடுத்தாலும் அவன் தங்கத்தைத்தான் பேரார்வத் துடன் வரவேற்பான்.



தங்கத்தையோ, வெள்ளியையோ நாம் தேவைகளுக்கு நேரடியாகப் பயன்படுத்த முடியாது என்று உனக்குத் தெரியும். இவற்றை உட்கொண்டு பசியைப் போக்க முடியாது. தாகத்தைத் தணிக்க முடியாது. துணிகளுக்குப் பதிலாக இவற்றை நம்மால் நேரடியாகவே பயன்படுத்த முடியாது. இப்படிப் பார்க்கும்போது இவற்றை வெறும் கூழாங்கற்களுக்கு ஒப்பிடலாம். எனினும் இவை இரண்டையும் மனிதன் பெரிதும் விரும்புகிறான். ஏனெனில் இவற்றை நேரடியாகப் பயன்படுத்த முடியா விட்டாலும், இவற்றின் உதவியால் அவன் தன் தேவைகள் அனைத்தையும் முடித்துக்கொள்ளலாம். உணவு, உடை முதலியவற்றையும் அடையலாம்.

இத்தகையதுதான் பதவியும். மக்களின் உள்ளங்களை ஆட்கொண்டு, அவற்றை உடைமையாக்கிக் கொள்வதைத் தான் நாம் பதவி என்று குறிப்பிடுகிறோம். தங்கம், வெள்ளி முதலியவற்றை உடைமையாக்கிக் கொண்டு மனிதன் தன் காரியங்களை முடித்துக் கொள்வதுபோல், மக்களின் உள்ளங்களை உடைமையாக்கிக்கொண்டு அவன் தன் தேவைகளைச் சாதித்துக் கொள்கிறான்.

பொருளாசை, பதவி மோகம் ஆகிய இரண்டிற்குமே காரணம் ஒன்றுதான். எனவே அந்தக் காரணத்தின் அடிப் படையில் மனிதன் இவ்விரண்டையுமே விரும்புகிறான். காரணத்தில் ஒற்றுமை இருப்பதுபோன்று காரியத்திலும் ஒற்றுமை ஏற்படுகிறது. என்றாலும், மனிதன் பொருளை விட அதிகமாகப் பதவிக்குத்தான் முக்கியத்துவம் அளிக்கிறான். எனவே பதவியை ஒரு படி அதிகமாக வரவேற்க வேண்டிய நிலைமை அவனுக்கு ஏற்படுகிறது.

செல்வத்தைவிட அதிகமாக மனிதன் பதவியை விரும்பு கிறானல்லவா? இதற்கு மூன்று காரணங்கள் கூறலாம்:

1. பொருளின் உதவியால், செல்வத்தின் காரணமாகப் பதவியைப் பெறுவது சிரமமான காரியம். ஆனால் பதவியின் உதவியால் செல்வத்தை எளிதில் அடைந்துவிட முடியும். மக்களின் மதிப்பைப் பெற்ற அறிஞர் ஒருவர் அல்லது துறவி ஒருவர் இருப்பதாக வைத்துக்கொள்! அவர் விரும்பினால் பொருள் திரட்டுவது அப்படி ஒன்றும் சிரமமான காரியமல்ல, சாதாரண காரியம். செல்வம் படைத்தவர்கள்தான் அவருக்குத் தங்கள் உள்ளங்களில் பீடம் அமைத்து அவர்கள் எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள். இது இப்படியிருக்க மக்களிடம் எத்தகைய மதிப்பும் பெறாத அற்பன் ஒருவன் இருப்பதாக வைத்துக்கொள்! அவனிடம் குறிப்பிடத் தக்கவாறு நல்ல பண்பும் எதுவும் கிடையாது. அதனால் மக்களிடம் அவன் எத்தகைய மரியாதையையும் எதிர்பார்க்க முடியாது. அவனுக்கு அதிர்ஷ்ட வசமாக ஒரு புதையல் கிடைத்து விட்டால் அவன் அதைக் காப்பாற்று வான்.

ஆனால் பொருளின் உதவியால் பதவியை அடைய அவன் விரும்பினால் அது சாதாரணக் காரியமல்ல என்பதை உணர்ந்துகொள்வான். ஏனெனில் பதவி என்பது ஒரு கருவி; பொருள் சேர்ப்பதற்குரிய வழி. எனவே பதவியை அடைந்தவன் கண்டிப்பாய்ப் பொருளை அடைந்து விடுவான். ஆனால் பொருள் படைத்த எல்லோராலும் பதவியை அடைந்துவிட முடியாது. ஆகவேதான் பதவி அதிகமாக வரவேற்கப்படுகிறது.



2. செல்வம் பல்வேறு இன்னல்களுக்கு நிலைக்களனாக அமைந்திருக்கிறது. செல்வத்தின் காரணமாகவே பலதரப் பட்ட துன்பங்கள் ஏற்பட வழியுண்டு. பொருள் திருட்டுப் போகும். துஷ்ட அரசர்களும், அநியாயக்காரர்களும் அந்தச் செல்வத்தை அபகரிக்கத் திட்டமிடுவார்கள். இதனால் பாது காப்புக்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகளைத் தேடியலைய வேண்டிய நிலைமை உண்டாகும். இதையொட்டிப் பல துன்பங்கள். ஆனால், இவை எல்லாம் பதவிக்குக் கிடையாது. மக்களின் உள்ளங்களில் மதிப்பு ஏற்பட்டு விட்டால் போதும். எல்லாம் கிடைக்கும்; எந்த ஆபத்தும் கிடையாது; எந்தத் துன்பமும் ஏற்படாது. உண்மையில் பதவி என்பது பையினுள் பத்திரம் செய்யப்பட்ட செல்வம். அதை எந்தத் திருடர்களாலும் அபகரிக்க முடியாது; எந்தக் கொள்ளைக்காரர்களாலும் பிடுங்க முடியாது; யாராலும் பறிக்க முடியாது.

பொருளைப் பேணிக் காக்கவேண்டும். வழிப்பறி செய்பவர்கள், அநியாயக்காரர்கள் முதலியவர்கள் குறித்து அஞ்ச வேண்டியிருக்கிறது. இதனால் அதைக் கண்ணும் கருத்துமாய்க் காப்பாற்றவேண்டிய அவசியமும் உண்டா கிறது. ஆனால் உள்ளத்தில் அடைக்கப்பட்டிருக்கும் பதவிச் செல்வம் பத்திரமானது. அது தனக்குத் தானே பத்திரமாக இருக்கிறது. பதவியுடையவன் அமைதியாக இருக்கலாம். திருட்டைப் பற்றியோ, கொள்ளையைப் பற்றியோ அவன் கவலைப்படவேண்டியதில்லை. ஆனால் ஒரு விஷயம். அவன் நிலைமை மாறினால், அவனிடம் துர்ச்செயல்கள் நடமாட ஆரம்பித்தால், மக்களின் உள்ளங்களில் அவன் மீதுள்ள நல்லெண்ணம் மாறத்தொடுத்தால், மறுகணமே அவன் பதவிச் செல்வம் சூறையாடப்பட்டுவிடும்.

என்றாலும், இந்த ஆபத்தைத் தடுத்து நிறுத்திவிட முடியும்.

3. உள்ளத்தின் செல்வமாகிய பதவி வளரும் தன்மை யுடையது. எத்தகைய சிரமமுமின்றி அது நாளுக்கு நாள் வளர்ந்து வரும். ஏனென்றால் ஒரு மனிதன் ஓர் அறிஞனை மதிக்கும்போது அதற்குக் காரணமான அவனின் நல்லம்சம் குறித்து அவன் பலரிடம் கூறுவான். அதைக் கேட்டவர் களின் உள்ளங்களிலும் நல்லெண்ணம் உண்டாகும். அதனால் அவர்களும் அந்த அறிஞனை விரும்புவார்கள், மதிப்பளிப்பார்கள். இதனால்தான் மனிதன், தான் செய்த நற்காரியங்களைப் பறையடிக்க முனைகிறான். புகழுக் குரிய தன் செயல்கள் நாலா புறமும் பறந்து செல்லும்போது அவற்றைக் கேட்ட பலருடைய உள்ளத்தில் தன்மீது மதிப்பெண்ணம் உண்டாகும் என்று கருதுகிறான்.

பதவி என்பது இவ்வாறு நாளுக்கு நாள் வளர்ச்சி யடைந்து விரியக்கூடிய தன்மை பொருந்தியது. அதன் வளர்ச்சிக்குக் குறிப்பிட்ட வரம்பு கிடையாது. ஆனால் பொருளைப்பற்றி, தங்கம் வெள்ளியைப் பற்றி இவ்வாறு கூற முடியாது. ஒருவனிடம் குறிப்பிட்ட அளவுக்குப் பணம் இருக்கலாம்; வரம்பிடப்பட்ட செல்வம் இருக்கலாம். அவற்றிற்கு அவன் உரிமையாளன்.

ஆனால் அவை கடின முயற்சியின்றி வளர்ச்சியடை யாது என்பது திண்ணம். பதவி வளர்வடைவதுபோல் செல்வம் தனக்குத் தானாகவே வளர்ச்சியடையாது. பொருள், தேங்கிக் கிடப்பது. பதவி விரிந்து செல்வது. இதனால் மனிதன் பதவியையும், அந்தஸ்தையும் அதிகமாக விரும்புகிறான். தன்னைப் பற்றிய பாராட்டுரைகள்



பலருடைய நாவிலிருந்தும் வெளிப்படும்போது பொருளை யும், செல்வத்தையும் அவன் துச்சமாக மதிக்கிறான்.

இவைதான் செல்வத்தைவிடப் பதவி உயர்வதற்குரிய காரணங்கள். இவற்றை விரிவுப்படுத்த ஆரம்பித்தால் அதிலிருந்து இன்னும் பல காரணங்கள் தோன்றலாம்.

நீ வினவலாம்:

பதவி, செல்வம் ஆகிய இரண்டிலுமே ஒரு கேள்வி யுண்டு. தன் வாழ்க்கையின் அவசியத்தைப் பொறுத்தே மனிதன் அவற்றை விரும்புகிறான். தனக்கு வேண்டிய இன்பங்களை அடைவதற்கும், தனக்கு ஏற்படும் தீங்கு களைத் தடுப்பதற்குமே அவன் பணத்தையும், பதவியையும் விரும்புகிறான். இது எல்லோருக்கும் தெரியும்.

உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம் முதலியவற்றைப் பணத்தின் உதவியாலோ, பதவியின் உதவியாலோ அடைய முடியும். தனக்கு ஏற்பட்டிருக்கும் வியாதியை அகற்றுவதற்கு மனிதன் பணத்தின் உதவி யையோ, பதவியின் உதவியையோ எதிர்பார்க்கிறான். இந்த அளவிற்கு மனிதன் செல்வத்தை வரவேற்பதும் பதவியை வரவேற்பதும் சாதாரணக் காரியங்கள். ஏனெனில் வாழ்க்கைக்கு அவசியமானவற்றை அவன் இவற்றின் உதவியால் அடைய முற்படுகிறான்; அடைகிறான்.

இந்த மனப் பான்மைக்கு அப்பால் விந்தையானதொரு மனப்பான்மையும் மனிதனிடமுண்டு. அவன் பொருள் திரட்ட வேண்டும் என்று ஆசைப்படுகிறான். தன் செல்வத்தைப் பெருக்க வேண்டுமென்று எண்ணுகிறான். தன்னிடமுள்ள பணம் பல மடங்காவதைக் குறிக்கோளாகக்

கொள்கிறான். வாழ்க்கைக்கு அவசியமான அளவிற்கு மட்டும் அவன் பொருள் சேர்க்கவில்லை. அதைவிடப் பன்மடங்கு அதிகமாகப் பணம் திரட்டத் திட்டமிடு கிறான்.

ஒருவனிடம் இரண்டு தங்கச் சுரங்கங்கள் இருப்பதாக வைத்துக்கொள்! அவை அவன் வாழ்க்கைக்குப் போது மானவை. எனினும் அவன் மூன்றாவது சுரங்கத்திற்கு முனைகிறான். இதேபோன்று தனக்கிருக்கும் செல்வாக்கு பலமடங்கு விரிவடைவதையும், தன் புகழ் திக்கெட்டிலும் பரவுவதையும் அவன் எதிர்பார்க்கிறான். அதற்கு முனை கிறான். அவனால் மதிக்க முடியாத இடங்களுக்கும், அவனால் பார்க்க முடியாத பகுதிகளுக்கும் தன் புகழ் பரவ வேண்டுமென்று ஆசைப்படுகிறான். இவ்வாறு அவன் புகழ் பரவுவது அப்படி ஒன்றும் சாதாரணக் காரியமல்ல. அதில் அவனுக்கே நம்பிக்கை இருக்காது. என்றாலும் இதை எல்லாம் அவன் விரும்பத்தானே செய்கிறான். அதுவும் எப்படி விரும்புகிறான்? பேராவலுடன் விரும்பு கிறான். இந்த மனப்பான்மை மனிதனிடம் உண்டு. அதை அறியாமை என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். ஏனெனில் இந்தப் பேராசையின் விளைவாக இம்மையிலோ மறுமை யிலோ எத்தகைய பயனையும் அடைய முடியாது!''

பதில் தருகிறேன்: இந்த மனப்பான்மை மனிதனிடம் இருக்கத்தான் செய்கிறது. இரண்டு காரணங்கள் இதற்கு உள்ளன. ஒன்று தெளிவானது; அதைப் பொது மக்களால் கூட உணர்ந்துகொள்ள முடியும். மற்றொன்று மர்மமானது; இதுதான் முக்கியமான காரணம். கூரிய மதியுடைய அறிஞர் களும் இந்தக் காரணத்தைச் சரிவரப் புரிந்துகொள்ளாமல் தவிக்கிறார்கள். அறிஞர்களின் நிலையே இப்படி என்றால்



பாமரர்களைப் பற்றிக் கேட்க வேண்டியதேயில்லை. இந்தக் காரணம் மனித மனப்பான்மையின் நுண்ணிய உணர்ச்சி யோடு சம்பந்தப்படுகிறது. எனவே, இது விஷயத்தில் ஆழமாகச் சிந்தித்தவர்களால் மட்டுமே இதை நன்கு உணர முடியும்!

**முதல் காரணம்:** பின்னர் வரப்போகும் அச்சத்திலிருந்து தப்புவதற்காக மனிதன் தேவைக்கதிகமான பொருளை விரும்புகிறான். இப்போது அவனிடமிருக்கும் செல்வம் அவன் தேவைகளுக்குப் போதுமானது. எனினும் மனிதன் நீண்ட ஆசையுள்ளவன். தன்னிடமிருக்கும் செல்வம் ஏதேனும் ஒரு காரணத்தால் பறிக்கப்பட்டால், தான் பிறரிடம் உதவிகோர நேரிடும் என்று அவன் உள்ளம் சித்திரித்துக் காட்டுகிறது.

இந்த எண்ணம் ஏற்பட்டதும் அவன் அச்சத்தால் நடுங்குகிறான். இந்த அச்சத்திலிருந்து எப்படித் தப்புவது? மேற்கொண்டு பணம் சேர்ப்பதால்தான் இந்த அச்சத்தி லிருந்து தப்ப முடியும். அவனிடம் முதலில் இருந்த செல்வம் பறிக்கப்பட்டாலும் இப்போது கவலையில்லை. அவன் தன்னையும் தன் வாழ்க்கையையும் விரும்புகிறான். தான் நீண்ட நாள் ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும், தன் எண்ணங்கள் எல்லாம் நிறைவேற வேண்டும், தனக்கு வரும் இடையூறுகள் தட்டப்பட வேண்டும் என்று அவன்- ஆசைப்படுகிறான். இவற்றிற்கெல்லாம் பொருள் அத்தியாவசியமாகும்.

இந்த எண்ணங்களெல்லாம் எங்கே நிறைவேறாமல் போய்விடுமோ என்று அவன் எண்ணிப் பார்க்கும்போது, அவன் உள்ளத்தில் இனமறியாத அச்சம் தலை தூக்குகிறது.

இந்த அச்சத்தை அகற்றும் பொருட்டு அவன் அதிகமான பொருளைத்தேட முற்படுகிறான். இப்படி அவன் எதிர்பார்க்கும் தொகை கிடைத்ததும் மறுபடியும் அந்த அச்சம் உண்டாகிவிடும். எவ்வளவு திரண்ட பொருளா யிருப்பினும் ஒருங்கே பறிக்கப்பட முடியுமல்லவா? எனவே மீண்டும் பொருள் தேட முற்படுவான். இப்படிப் பொருள் மோகம் வளர்ந்து கொண்டே போகும். இவ்வாறு பொருள் குறித்து ஏற்படும் அச்சத்திற்குக் குறிப்பிட்ட எல்லை கிடையாது.

எனவேதான் அண்ணல் நபியவர்கள், ''ஞானத்தின் விஷயத்தில் பேராசை கொண்டவனும் பொருளின் விஷயத் தில் பேராசை கொண்டவனும் திருப்தியடைவதே யில்லை!'' என்று கூறினார்கள்.

செல்வத்தின் விஷயத்தில் அமைந்த இக்காரணம் பதவியின் விஷயத்திலும் அமைந்திருக்கிறது. தன் பதவி எங்கே சருகிவிடுமோ என்று அவன் அஞ்சுவதால் தன் புகழைப் பல ஊர்களிலும் பரப்ப முனைகிறான். தன் நாட்டைவிட்டு அடுத்த நாட்டுக்குப் புறப்படவேண்டிய நிலைமை அவனுக்கு ஏற்படலாமல்லவா? அல்லது அவனை மதித்த மக்கள் தங்கள் நாட்டை விட்டு அவன் வசிக்கும் நாட்டிற்கு வந்து அவனுக்கு உதவி செய்யலா மல்லவா? இவையெல்லாம் நடக்கக் கூடியவையாகத் தோன்றினாலும், இப்படியெல்லாம் நடப்பது சாத்திய மில்லை. சுருங்கச் சொன்னால், பிற நாட்டாரின் உள்ளத்தில் அவனுக்கு மதிப்பு இருந்தால் மேற்குறிப்பிட்ட அச்சம் தணியும். ''பதவி போய்விட்டால் என்ன செய்வது?'' என்று அவன் அஞ்ச வேண்டியதில்லை. இவ்வாறு பதவி



விரிவடையும்போது பதவியுடையவன் திருப்தியடை கிறான்; மகிழ்ச்சியடைகிறான்; இன்பம் காண்கிறான். ஏனெனில் இதனால் மேற்குறிப்பிட்ட அச்சம் நீங்குகிறது.

**இரண்டாம் காரணம்:** இது மிகவும் உறுதியான காரணம். ஆத்மாவுடன் தொடர்புள்ளது. உயிருடன் தொடர் புள்ளது. உயிர் என்பது தெய்வீகத்துவம் பொருந்தியது. ''அவர்கள் உம்மிடம் உயிரைப் பற்றிக் கேட்பார்கள். அது இறைவனின் காரியத்தில் உள்ளது என்று கூறும்!'' என இறைவன் எடுத்துரைக்கிறான். அது எப்படித் தெய்வத் துவம் பொருந்தியது? அது ஞானோதய மர்மங்களில் உள்ளது. அதை வெளியிடுவதற்கு அனுமதியில்லை. ஏனெனில், திருநபியவர்களே அதை வெளியிடவில்லை! என்றாலும், அதை நீ அறிந்துகொள்வதற்கு முன்னர் சில விஷயங்களை அறிந்துகொள்!

மனிதன் உள்ளத்தில் சில சமயங்களில் மிருகக் குணம் தாண்டவமாடுவதுண்டு. உணவாசை, புணர்ச்சி மோகம் முதலியவை இக்குணத்தின் விளைவுகள். வேறு சில சமயங்களில் விலங்குகள் குணம் உண்டாகிறது. சண்டை பிடித்தல், போர் புரிதல், பிறரைத் துன்புறுத்தல் முதலி யவை இதன் விளைவுகள். இன்னும் சில சமயங்களில் 'ஷைத்தா'னின் தன்மை தலை காட்டுகிறது. தந்திரம் செய்தல், மோசடி புரிதல், வழி கெடுத்தல் முதலியவை இதன் விபரீதங்கள். இன்னும் சில சமயங்களில் தெய்வீகத்தன்மை பளிச்சிடுகிறது. பெருமை கொள்ளுதல், சிறப்பைத் தேடுதல், பலாத்காரம் செய்தல், உயர்வைத் தேடுதல் முதலியவை இதன் விளைவுகள். இவ்வாறு மனிதனின் உள்ளம் பலதரப்பட்ட உணர்ச்சிகளால் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது.

மனிதனிடம் தெய்வீகத் தன்மையும் கலந்திருப்பதால் அவன் உயர்வையும் அந்தஸ்தையும் விரும்பி வரவேற்கிறான். இறைவன் உயர்வுடையவன்; தனிப்பட்ட அந்தஸ்துடையவன். எனவேதான் தனிச் சிறப்படைய வேண்டும் என்று எண்ணுகிறான். பூரணத்தன்மை தன்னிடம் அடைக்கலப்பட வேண்டும் என்று மனிதன் ஆசைப்படுகிறான். பூரணத் தன்மைகள், சிறப்பம்சங்கள் அனைத்தும் இறைவனின் வர்ணனைகளில் பட்டவை. ஆகவே தெய்வீகம் பொருந்திய உள்ளம் கொண்ட மனிதன் அவற்றை விரும்புகிறான். அந்தச் சிறப்பம்சங்கள் மற்றவர்களைத் தவிர்த்துத் தன்னிடம் மட்டுமே அமைந்திருக்க வேண்டும் என்று ஆவலுகிறான். ஏனெனில் தனித்துப் புகழடைவதில் தான் உயர்வு உண்டு.

சூரியன் சிறப்பம்சம் கொண்டிருக்கிறது; பூரணத் தன்மை கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அது பரிபூரணமான ஒளியைத் தன்னிடம் வைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்தச் சிறப்பு அது தனித்துப் பிரகாசிக்கும் போதுதான். அதைப்போன்று மற்றொரு சூரியன் உண்டாக்கப்பட்டால் அதன் சிறப்பு, கணிசமான அளவிற்குக் குன்றிப் போய்விடும். இந்த இடத்தில் சூரியனுக்குத் தனிச் சிறப்புக் கிடையாதல்லவா? அதன் சிறப்பம்சம்தான் இரு கூறுகளாகப் பிரிந்துவிட்டதே!

தனித்த உள்ளமையுடையவன் இறைவன் ஒருவனே! அவனுக்கு நிகரான வேறுஎந்த உள்ளமையும் கிடையாது. அவனைத் தவிர்த்து மற்றவை அனைத்தும் அவன் பேராற்றலின் பிரதிபிம்பங்கள். அவற்றால் தனித்து நிற்க முடியாது. இறைவனின் ஆற்றலினால்தான் அவை நிலை பெறுகின்றன. இவற்றில் எதுவும் அவன் அந்தஸ்துக்கு நிகராக உண்டாக்கப்படவில்லை.



சூரியனின் ஒளி உலகின் எல்லாப் பகுதிகளிலும் பிரதிபலிப்பதால் சூரியனின் சிறப்புக் குறைந்துவிடாது. மற்றொரு சூரியன் உண்டானால்தான் அதற்கு இழிவு. இதேபோன்று உலகிலுள்ள சகலத்திலும் இறைவனின் பேராற்றல் பிரதிபலிக்கிறது. அவை ஒவ்வொன்றும் அவன் ஆற்றலிலிருந்து வெளியானவையே. இவ்வாறு ஒப்பற்ற முறையில், இணையற்ற வகையில் தனித்து இயங்குவதில் தான் தெய்வீகத் தன்மை மிளிர்கிறது. இது ஒரு சிறப்பம்சம். எனவே, மனிதன் தான் தனித்த முறையில் சிறப்படைய வேண்டும் என்று ஆவல் கொள்கிறான். இந்த ஆவல் அவன் இயற்கையையொட்டியே உண்டாகிறது. மனிதனிடம் தெய்வீகத்தன்மை இடம் பெற்றிருக்கிறதல்லாவா?

இந்தத் தத்துவத்தின் அடிப்படையில்தான் சில அறிஞர்கள், ''பிர்அவ்ன், நான்தான் இறைவன் என்று கூறினான். ஆனால் அவன் கூறிய அதே கருத்தை ஒவ்வொரு மனிதனும் தன்னுள் மறைத்துக் கொண்டிருக்கிறான்..'' என்று கூறினார்கள்.

அவர்கள் கூறுவது உண்மை. அடிபணிந்து நடப்பதும் அடிமைத்துவத்தைக் கடைப்பிடிப்பதும் சிரமமான காரியங்கள். தெய்வீகத் தன்மை இயற்கையிலேயே விரும்பப்படுவதற்குரியது. ''உயிர் என்பது இறைவனின் காரியத்தில் உள்ளது'' என்று இறைவனே கூறிவிட்டானல்லவா? அந்த உயிர் - இறைவனோடு தொடர்புகொண்ட மனித உயிர் - தெய்வீகத் தன்மையாகிய, இறைத் தன்மையாகிய உயர்வு, பெருமை முதலியவற்றை விரும்புகிறது.

மனித உள்ளம் விசித்திரமானது; விந்தை நிறைந்தது. அதனால் சிறப்பின் கடைசி எல்லையை அடைய முடியா விட்டாலும் அதை அடைய வேண்டும் என்ற ஆவல் மட்டும் குறைவதில்லை! சிறப்பை அது விரும்புகிறது. அதில் இன்பம் காண்கிறது.

உலகிலுள்ள உயிரினங்கள் ஒவ்வொன்றும் தன்னை விரும்புகின்றன. தன் உயர்வை வரவேற்கின்றன. தனக்கு ஏற்படும் அழிவைத் தடுக்க முனைகின்றன. படைப்புகள் அனைத்தின்மீதும் தன் உரிமையை நிலைப்படுத்தும் சிறப்புதான் உண்மையில் சிறந்த அம்சம்.

ஏனெனில் நீ சிறப்பிற்கெல்லாம் சிறப்பான அம்சத்தை அடைய விரும்பினால், உன்னைத் தவிர்த்து மற்றவை அனைத்தும் உன் உள்ளமையிலிருந்து உண்டாகியிருக்க வேண்டும். அவற்றையெல்லாம் நீயே உண்டாக்கியிருக்க வேண்டும். அப்போதுதான் உன் உரிமையை அவற்றின்மீது நிலைப்படுத்த முடியும்; உன் ஆற்றலை அவற்றின்மீது செலுத்த முடியும். ஆனால் இந்தக் காரியம் நடக்க முடியாதது. நீ அடிமை என்பதை மறந்து விடாதே! உன்னைப் படைத்த இறைவன்தான் உன் அதிபதி. மேற்குறிப்பிட்ட காரியம் நடக்காததாக இருந்தாலும் அந்தக் காரியத்தைச் சாதிக்க வேண்டும் என்று அவன் எண்ணத் தான் செய்கிறான். சகல படைப்பினங்கள்மீதும் தன் உரிமையை நிலைப்படுத்தி அவற்றை ஆட்டிப் படைக்கும் தனியாற்றல் தன்னிடம் இருக்க வேணடும் என்று அவன் ஆசைப்படுகிறான். இது மேலான சிறப்பம்சமல்லவா?

உள்ளமைகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்:



1. இந்தப் பிரிவைச் சேர்ந்த உள்ளமைகள் மாற்றத்தை யும் திருத்தத்தையும் ஏற்றுக்கொள்ளமாட்டா. இவற்றை யாராலும் மாற்றியமைக்க, திருத்தி அமைக்க முடியாது. இறைவனின் உள்ளமை, அவன் வர்ணனைகள் இதற்கு உதாரணங்கள்.

2. இந்தப் பிரவைச் சேர்ந்த உள்ளமைகளைத் திருத்தி யமைக்க முடியும் - மாற்றி அமைக்க முடியும். ஆனால் இவற்றைத் திருத்தும் ஆற்றல் மனிதனிடம் கண்டிப்பாய்க் கிடையாது. இறைவன் விரும்பினால் அவற்றை மாற்றியமைக்கக் கூடும். விண்ணகம், விண்மீன்கள், அமரர் - ஜின் - ஷைத்தான் ஆகிய உள்ளமைகளின் ஆத்மாக்கள், கடல், மலை முதலியவை இதற்கு உதாரணங்கள்.

3. மனிதனால் மாற்றியமைக்கத் தகுந்த உண்மைகள் இந்தப் பிரிவில் கட்டுப்படுகின்றன. இம்மாநிலத்திலுள்ள சகலத்தையும் இதற்கு உதாரணங்களாகக் கொடுக்கலாம். இந்த மூன்றாவது பிரிவில் பட்டதுதான் மக்களின் உள்ளங்கள். அவற்றை மனிதனால் திருத்த முடியும்; அவற்றில் அவன் தன் சக்தியைச் செலுத்த முடியும்.

விண்ணகமும் அத்துடன் சம்பந்தப்பட்ட இதர படைப் பினங்களும் தனிப்பட்டவை. அவற்றை மனிதனால் திருத் தவோ மாற்றியமைக்கவோ முடியாது. அவற்றில் மனிதன் தன் சக்தியைச் செலுத்தி ஆட்கொள்வது சாத்தியமில்லை. அவற்றின்மீது ஒரு மனிதன் தன் உரிமையை எந்த வகை யிலும் நிலை நாட்ட முடியாது; என்றாலும், அவற்றை யெல்லாம் அவன் தன் அறிவாற்றலினாலாவது கட்டுப் படுத்த எண்ணுகிறான். ஆட்டிப் படைக்க முடியாவிட்டா லும் அறிவின் இன்பத்தையாவது அடையலாமல்லாவா?

இதனால்தான் அவன் இறைவனைப் பற்றியும் வானவர் களைப் பற்றியும் அறிய ஆசைப்படுகிறான். விண்மீன்கள், விண்ணகம், அவற்றிலுள்ள மரங்கள் முதலியவற்றை அறியத் துடிக்கிறான். கடலுக்கடியிலுள்ள அதிசயங்களை யும் மலையுச்சியிலுள்ள மர்மங்களையும் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறான்.

இவ்வாறு அவன் விரும்புவது, விந்தையான ஒரு செயல்முறையை அறிய இயலாதவன் அதை அறிய விரும்புவது போல்தான் இருக்கிறது. உதாரணமாகச் சதுரங்கம் விளையாடத் தெரியாதவன் அந்த ஆட்டத்தைப் பற்றி அறிய விரும்புகிறான். அந்த விளையாட்டில் காய் களை எப்படி வைப்பது, நகர்த்துவது என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறான்.

கணித சாஸ்திரத்திலுள்ள அதிசயமான கணித முறையைப் பார்க்கும் ஒருவன் அதை அறிந்து கொள்ளத் துடிக்கிறான். அவன் தன்னிடமுள்ள குறைபாட்டையும் இயலாமையையும் உணர்கிறான். தன்னால் அவற்றை எளிதில் அறிந்துகொள்ள முடியாது என்று அவனுக்கே தெரியும். என்றாலும் அவன் இவற்றையெல்லாம் தெரிந்து கொள்ள ஆசைப்படத்தான் செய்கிறான். அவன் தன் குறை பாட்டையும் இயலாமையையும் எண்ணி வருந்தினாலும் அறிவின் சிறப்பை நினைத்து இன்பமடைகிறான்.

இவை அனைத்தும் விண்ணகத்தோடு சம்பந்தப் பட்டவை. இவை மேலே குறிப்பிட்ட இரண்டாவது பிரிவில் இடம் பெறுகின்றன. மூன்றாவது பிரிவில் மண்ணகத்தில் உள்ளவை இடம் பெறுகின்றன. இவற்றில் மனிதனின் ஆற்றல் குறிப்பிட்ட பயனைத் தரும். அவற் றைத் தன் விருப்பம்போல் ஆட்டிப் படைக்க முடியும்.



இதை அவன் விரும்புகிறான். உலகிலுள்ளவற்றை ஜடப் பொருள், ஆத்மா என்று இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

**ஜடப்பொருள்:** இதில் தங்கக் காசுகள், வெள்ளி நாணயங்கள் முதலியவை கட்டுப்படுகின்றன. இவற்றை மனிதனால் ஆட்கொள்ள இயலும். எனவே அவன் இவற்றை ஆட்கொள்ளும் சக்தியை விரும்புகிறான்; அவற்றை எடுப்பதற்கும் வைப்பதற்கும் தனக்கு அதிகாரம் வேண்டும் என்று எண்ணுகிறான்; ஏற்றுக்கொள்வதற்கும் ஏற்க மறுப்பதற்கும் உரிமை வேண்டுமென்று கருதுகிறான். இது ஒரு சக்தி. சக்தி என்பது சிறப்பம்சங்களில் ஒன்று. சிறப்பம் சங்கள் தெய்வீகத் தன்மை பொருந்தியவை. எனவே, இந்தத் தெய்வீகத் தன்மையை மனிதன் இயற்கையிலேயே விரும்புகிறான்.

மேற்குறிப்பிட் காரணத்தால்தான் மனிதன் தன் வாழ்க்கையின் அவசியத்திற்குத் தேவையானதைவிட அதிக மாகப் பொருளீட்ட விரும்புகிறான். அவன் பொருளை விரும்புவதுபோல, பிற மக்களை அடக்கியாள்வதற்கும் அவர்களை அடிமை கொள்வதற்கும் ஆசைப்படுகிறான். இந்தக் காரியத்தைப் பலவந்தமாகச் சாதித்துக் கொள் வதற்கும் அவன் தயாராயிருக்கிறான். ஏனெனில் பலவந்தம் என்பதும் ஒரு சக்திதான். சக்தி என்பது சிறப்பம்சங்களில் ஒன்று என்று ஆரம்பத்திலேயே குறிப்பிட்டு விட்டேன்.

**ஆத்மா:** மக்களின் உயிரும் அவர்களின் உள்ளமும் இதில் கட்டுப்படுகின்றன. எனவே இவற்றின்மீது உரிமை கொள்ள, இவற்றை அடக்கியாள, இவற்றைத் தன் வசப்படுத்த மனிதன் விரும்புகிறான். தன் சைக்கினைக்கு அவன் ஆடவேண்டும் என்பது அவன் விருப்பம். இதில்

உயர்வு உண்டு. இறைவன் எல்லாவற்றையும் அடக்கியாண்டு உயர்வுற்றிருப்பது போன்று தானும் உயர்வுற வேண்டும் என்று மனிதன் விரும்புகிறான்.

மானிட உள்ளம் ஒரு மனிதனை விரும்பினால்தான் அது அவனுக்குக் கட்டுப்படும். அது அவனை விரும்ப வேண்டுமாயின் அவனிடம் சிறப்பம்சம் எதையேனும் அது காணவேண்டும். சிறப்பம்சத்தைக் கண்டதும் அது அவனுக்கு அடிபணிந்துவிடும். சிறப்பம்சங்கள் அனைத்தும் விரும்பப்படுபவையே. ஏனென்றால் சிறப்பம்சங்கள் தெய்வீகத் தன்மைகள். தெய்வீகத் தன்மைகள் ஒவ்வொன்றையும் மனிதன் விரும்புகிறான் - அவனிடம் தெய்வீகத் தன்மை ஓரளவு இடம் பெற்றிருப்பதால். இந்தத் தன்மை மரணத்தால் மாளாது. மண் அதைத் தின்னாது. அந்தத் தன்மையில்தான் மத நம்பிக்கையும் இறையறிவும் ஒளி விடுகின்றன. அது இறை சந்திப்பை அடைந்து இன்பம் காணும்; அதன்பால் விரையும்.

உள்ளத்தை வசப்படுத்திக் கொள்வதுதான் பதவி என்று அறிந்து கொண்டுவிட்டாய். ஒருவனுக்கு மக்களின் உள்ளத்தில் பதவி ஏற்பட்டுவிட்டால் அவர்கள்மீது அவனுக்கு உரிமையும் சக்தியும் ஏற்பட்டு விடுகின்றன. ஆகவே ஒவ்வொரு மனிதனும் தான் அடைந்திருக்கும் சிறப்பம்சம் குறித்து மகிழ்கிறான்; இன்பமடைகிறான்.

இதுதான் மனிதன் பொருளையும் பதவியையும் அறிவையும் அதிகமாக அடைய விரும்புவதற்குக் காரணம். இந்தக் காரணம், மனிதன் தனக்குத் தேவையான பொருளை விரும்பும்போது மட்டுமல்ல, அதற்கு அப்பாலும் உண்டு. ஏனெனில் அவன் சில சமயங்களில் தன் வாழ்க்கைக்குக்



கிஞ்சித்தும் பயன்படாதவற்றை அறிய ஆவல் கொள்கிறான். இன்னும் சொல்லப்போனால் அவற்றினால் அவன் நோக்கங்கள் பல முறியடிக்கப்படுகின்றன; அவன் எண்ணங்கள் பல வீணாக்கப்படுகின்றன. இப்படி இருந்தும் மனிதனின் மனம் அதிசயமானவற்றையும் சிக்கலானவற்றையும் அறிந்துகொள்ள முனையத்தான் செய்கிறது. அறிவில் உயர்வு உண்டு என்று அது தெரிந்திருப்பது தான் இதற்குக் காரணம். அறிவு என்பது சிறப்பம்சம், தெய்வீகத்துவம் பொருந்தியது; தெய்வீகத்தன்மை வாய்ந்தது. மனிதனிடம் தெய்வீகம் இருப்பதால் அவன் தன் இயற்கையின் அடிப்படையில் அதை அடைய ஆவல் கொள்கிறான்.

அறிவும் சக்தியும் சிறப்பம்சங்கள் தாம். என்றாலும் இவற்றிற்குச் சில பொய்த் தோற்றங்கள் உள்ளன. அவற்றைக் கண்டு ஏமாந்து விடக்கூடாது.

இதோ அவற்றை விளக்குகிறேன்.

❑ ● ❑

# 6. உண்மையின் சிறப்பு

தனித்துப் புகழடைவதில் தான் உண்மையான சிறப்பு, பூரணத் தன்மை உண்டு என்று அறிந்துகொண்டுவிட்டாய். என்றாலும், சில சமயங்களில் உண்மையான சிறப்பம்சத் திற்குக் குறுக்கே அவன் பொய்த் தோற்றம் வந்துவிடுவ துண்டு. இதை முதலில் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். விளக்கமாக எழுதுகிறேன்.

பூரணமான அறிவுடையவன் இறைவன் ஒருவனே. அவன் அறிவுக்குத்தான் உண்மையான சிறப்பு உண்டு. இவ்வாறு இறைவனின் அறிவு, அவன் ஞானம் தனிச் சிறப் புடன் விளங்குவதற்கு மூன்று காரணங்கள் கூறலாம்.

*1.* இறைவனின் அறிவு விரிவானது; வரம்பிட முடியாதது. எந்த ஒன்றும் அவன் அறிவிலிருந்து தப்பிவிட முடியாது. அவன் சகலத்தையும் அறிந்த பேரறிஞன். இதனால்தான் ஒரு மனிதனின் அறிவு விரிய விரிய அவன் இறைவனை நெருங்குகிறான்.

*2.* இறைவனின் அறிவொளியில் உள்ளமைகள் அனைத் தின் உண்மையான நிலை பிரதிபலிக்கிறது; ஒவ்வொரு



பொருள் பற்றியும் உண்மை நிலை தோன்றுகிறது. அவன் அறிவில் ஒரு பொருளின் பொய்த் தோற்றமோ உண்மைக்கு மாற்றமான நிலையோ தோன்றுவதில்லை; தோன்றவும் முடியாது. அவன் சகலத்தையும் மிக மிகத் தெளிவாக அறிகிறான். இதனால்தான் மானிடனின் அறிவில் தெளிவும் தீர்மானமும் உண்மை நிலையும் பிரதிபலிக்கும்போது அவன் இறைவனை நெருங்குகிறான்.

*3.* இறைவனின் அறிவு நிரந்தரமானது; என்றென்றும் நிலைத்து நிற்கும் தன்மையுடையது. அது காலத்தால் மாற்றமடையாது; மறைந்து போகாது. அவன் அறிவு மாற்றமடைவதைக் கற்பனைக் கண்ணால் கூடக் காண முடியாது. இதனால்தான் ஒரு மனிதனின் அறிவு அடிக்கடி மாறிக்கொண்டிராமல் ஸ்திரத் தன்மை பெறும்போது அவன் இறைவனைச் சமீபிக்கிறான்.

அறிவினங்கள் இரண்டு வகை: மாறக்கூடிய அறிவு, மூலத்திற்கு மூலமான, மாற்றமடையாத அறிவு.

**மாறக்கூடிய அறிவு:** உதாரணமாக 'ஸைத்' என்ற பெயருடைய ஒருவன் வீட்டில் இருப்பதாக வைத்துக் கொள்! அவன் வீட்டிலிருப்பது குறித்து நீ அறிந்திருக் கிறாய். இந்த அறிவு நிலையானதல்ல; மாறக் கூடியது. ஸைத் என்ற அவன் உனக்குத் தெரியாமல் வீட்டைவிட்டு வெளியேறியிருக்க முடியும். அதை அறியாத நீ பழையபடி அவன் இன்னும் வீட்டில் இருப்பதாகவே எண்ணிக் கொண் டிருப்பாய். இந்த இடத்தில் உன் அறிவு அறியாமையாக மாறி விடுகிறது. அறியாமை என்பது உண்மையில் சிறப்பம்சமல்ல; குறைபாடு.

மேற்குறிப்பிட்ட அறிவு அறியாமையாக மாறுவது போன்று உலகிலுள்ள பலதரப்பட்ட அறிவினங்களும் மாற்றமடையக் கூடியவையே. அவற்றிற்கு நிரந்தரத் தன்மை, ஸ்திரத் தன்மை கிடையாது. மலையின் உயரத்தையும் நிலத்தின் அகலத்தையும் நீ அறிகிறாய். பரந்து கிடக்கும் பட்டணங்களின் எண்ணிக்கையையும் அவற்றிற்கு இடையிலுள்ள தூரத்தையும் நீ உணர்கிறாய். இவை அனைத்தும் மாறக்கூடியவைதான்.

இத்தகையதுதான் அகராதியிலுள்ள வார்த்தைகளைப் பற்றிய அறிவும். அவை காலத்திற்குத் தக்கவாறு, மக்களின் பழக்க வழக்கத்திற்குத் தகுந்தபடி மாறிக்கொண்டேயிருக்கும். இவை அறிவினங்கள்தாம்; என்றாலும் இவை காற்றின் திசை காட்டும் கருவியைப் போன்று மாறிக் கொண்டேயிருக்கும். இந்த அறிவில் நிரந்தரமான சிறப்பம்சம் கிடையாது. எனவே இது உள்ளத்திற்குச் சிறப்பை அளிக்காது.

**லத்திற்கு மூலமான மாற்றமடையாத அறிவு:** நிகழக் ற்றின் நிகழும் தன்மை, நிகழ்ந்தே ஆகவேண்டிய அவசியத் தன்மை, நிகழ முடியாதவற்றின் அ- -பாவிதத் தன்மை ஆகியவை இதற்கு உதாரணங்கள். அவை மூலத்திற்கு மூலமான அடிப்படை அறிவுகள். இவை என்றும் மாற்றமடையா. ஏனெனில், நடக்க முடியாத ஒன்று எக்காரணம் கொண்டும் நடந்தே தீர வேண்டியதாக மாற முடியாது. அசம்பாவிதமான ஒன்று அவசியமான ஒன்றாக மாறுவதற்கு வழியில்லை.

இத்தகைய அறிவுகள் இறைவனைப் பற்றிய அறிவிலும் உண்டு. இறைவனுக்கு அவசியமானது எது, அவன் வர்ணனைகளில் இருக்க முடியாதது எது, அவன் செயல் முறைகளில் சாதாரணமாக நடக்கக் கூடியது எது என்று



மனிதன் அறிய வேண்டும். இறைவன் அவன் தன்மைகள், அவன் செயல் முறைகள், விண்ணிலும் மண்ணிலும் அவன் அமைத்து வைத்திருக்கும் தத்துவங்கள், இம்மையையும் மறுமையையும் உண்டாக்கி வரிசைப்படுத்தியிருப்பதில் அவன் கருத்து முதலியவற்றை மனிதன் நல்ல முறையில் அறிய வேண்டும்.

இந்த அறிவுதான் உண்மையான சிறப்பம்சம். இந்த அம்சம் கொண்டவர்கள்தாம் இறையண்மையைப் பெறுகிறார்கள். இந்தச் சிறப்பம்சம் மரணத்திற்குப் பிறகும் நிலைத்து நிற்கக் கூடியது. இறையறிவு பெற்றவர்களுக்கு அறிவு மரணத்திற்குப் பிறகு ஒளிப் பிழம்பாகக் காட்சியளிக்கும். ''இறைவனே! எங்கள் ஒளியைப் பரிபூரணப் படுத்துவாயாக!'' என்று அவர்கள் இறைஞ்சுவார்கள். உலக வாழ்க்கையில் அவர்களால் அறிந்துகொள்ள முடியாத மர்மங்களை அவர்களுக்கு உணர்த்துவதற்கு அந்த அறிவு மூலகாரணமாக அமைந்துவிடும். மங்கலான விளக்கு ஒருவனிடமிருந்தால், அந்த விளக்கின் உதவியால் மற்றொரு விளக்கைப் பற்ற வைத்துப் பூரண ஒளியை உண்டாக்கலாம் - அப்போது அந்த மங்கிய ஒளி பூரண ஒளிக்கு மூலமாக அமைந்துவிடும். இதே போன்று மேற்குறிப்பிட்டவர்களின் அறிவு அவர்கள் பூரண அறிவைப் பெறுவதற்கு மூலமாக அமைந்துவிடும்.

விளக்கேயில்லாதவன் பூரண ஒளியை எதிர்பார்க்க முடியாததுபோன்று, மேற்குறப்பிட்ட அறிவேயில்லாதவன் பூரண அறிவை எதிர்பார்க்க முடியாது. அவன் இருளில் அகப்பட்டுக் கொண்டவனைப்போன்று அடுக்கடுக்கான கார்முகிற் கூட்டம் சூழ்ந்த வேளையில், சுருள் சுருளான

அலைகளையுடைய ஆழ்கடலுக்கடியில் வியாபித்திருக்கும் இருளில் சிக்கிக் கொண்டவனைப்போன்று தடுமாறு வான்.

ஆக, இறைவனைப் பற்றிய அறிவில்தான் ஈடேற்ற முண்டு என்று நீ உணர்ந்து கொண்டுவிட்டாய். இதைத் தவிர்த்து மற்ற அறிவினங்களில் சில பயனற்றவை. கவி புனையும் அறிவை இதற்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். இன்னும் சில, இறையறிவு ஏற்படுவதற்கு உதவி புரிகின்றன. அரபி மொழி, திருமறையின் வியாக்கியானம், இஸ்லாமியச் சட்ட நூல்கள், திரு நபி கருத்து முதலியவை இதில் சேருகின்றன.

அரபி மொழியைத் தெரிந்துகொள்வதன் மூலம் திருக் குர்ஆனின் வியாக்கியான நூல்களைப் படித்துணரலாம். வியாக்கியான நூல்களின் உதவியால் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதற்கென திருக்குர்ஆனில் கூறப்பட் டுள்ள வசனங்களையும் மற்றச் செயல்களையும் அறிந்து கொள்ளலாம். அவற்றின் உதவியால் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தலாம். அதன் பிறகு உள்ளத்தை இறைவனின்பால் - இறையறிவின் பக்கம் திருப்பலாம். அதற்கு வேண்டிய பக்குவநிலை அந்த உள்ளத்திற்கு ஏற்பட்டுவிடும். ''உள்ளத்தைத் தூய்மைப் படுத்தியவன் வெற்றியடைந்துவிட்டான்'' என்று இறைவன் கூறுகிறான்.

மேற்குறிப்பிட்ட அறிவினங்கள் அனைத்தும் இறை யறிவு ஏற்படுவதற்கு உபகரணங்கள். இறைவன், அவன் தன்மைகள், அவன் செயல் முறைகள் முதலியவை குறித்து அறிந்து கொள்வதில்தான் உண்மையான சிறப்பு உண்டு. உலகிலுள்ள உண்மைகளைப் பற்றிய மற்ற அறிவினங்கள்



அனைத்தும் இதில் சுருண்டு முடங்கிக் கொள்கின்றன. ஏனெனில், உள்ளமைகள் அனைத்தும் இறைவனால் உண்டாக்கப்பட்டவையே. அவற்றில் அவன் இறைவனின் ஆற்றலையும் தனிச் சக்தியையும் காணும்போது அவனது இறையறிவுதான் விரிவடைகிறது.

மேலே நான் எழுதி வந்ததுதான் சிறப்பிற்குரிய பூரணத் தன்மையுடைய அறிவு. இந்த வியாக்கியானம் பதவிக்கும் முகஸ்துதிக்கும் பொருந்தாவிட்டாலும் - பதவிக்கென்று எழுதப்பட்ட இந்நூலில், அறிவைப் பற்றி விளக்க வேண்டிய அவசியம் இல்லாவிட்டாலும் அறிவு என்பது சிறப்பம்சங்களில் ஒன்று. எனவே அதை விளக்கினேன்.

**சக்தி:** சக்தி என்பதும் சிறப்பம்சம்தான். என்றாலும், இது விஷயத்தில் பூரணத் தன்மை பெற்றிருக்கும் பேறு மனிதனுக்குக் கிடையாது. உண்மையான அறிவு அவனிட மிருந்தாலும் உண்மையான ஆற்றல் அவனிடம் கிடை யாது. உண்மையான ஆற்றல் இறைவன் ஒருவனுக்கே உரித்தானது. அவன் பேராற்றலுடையவன்.

அறிவுச் செல்வம் மரணத்திற்குப் பிறகும் பயன்படக் கூடியது; மனிதனை இறைவன்பால் இழுத்துச் செல்லும் ஆற்றலுடையது. ஆனால் சக்திச் செல்வத்தைப் பற்றி இவ்வாறு கூற முடியாது. எனினும் சக்தி ஒரு வகையில் உயர்ந்ததுதான். அதன் உதவியால்தான் அறிவு ஏற்படுகிறது. அறிவை ஏற்கும் சக்தி உள்ளத்திற்கு அவசியமல்லவா? உதாரணமாக அங்கங்கள் ஆரோக்கியத்துடனிருப்பது கால்கள் நடப்பதற்கும் கரங்கள் பிடிப்பதற்கும் - எடுப் பதற்கும் வேண்டிய சக்தியோடிருப்பது, புலன்கள் விஷயத் தைக் கிரகிக்கத் தயாராயிருப்பது - இவை அனைத்தும்

அறிவு உண்டாவதற்குக் கருவிகள். உடல் ஆரோக்கியத் தோடு இருந்தால்தானே அறிவு பெறப் போதிய வசதி ஏற்படும்?

இவற்றையெல்லாம் அவன் இறையறிவைக் குறிக் கோளாகக் கொண்டுதான் செய்யவேண்டும், இல்லை யேல் அதில் இம்மியளவும் நன்மையில்லை. இதை ஒருவன் சிறப்பம்சம் என்று கருதினால் அவன் அறியாமை யில் இருக்கிறான் என்றுதான் பொருள். இந்த அறியாமை யில் பெரும்பாலோர் சிக்கிக் கொண்டுவிட்டார்கள். கோபத்தை அடக்கிக் கொள்வதன் மூலம் தன் உடல்மீது ஆற்றல் பெறுவதும், பெரும் பொருள் திரட்டிச் செல்வத்தை ஆட்கொள்வதும், பிறர் உள்ளத்தில் தன் மதிப்பைப் புகுத்தி ஆட்டிப் படைப்பதும் சிறப்பம்சங்களே என்று அவர்கள் எண்ணுகிறார்கள். இப்படி எண்ணுவதால் அவற்றை அவர்கள் விரும்புகிறார்கள். அவற்றை விரும்புவ தால் அடைய முனைகிறார்கள்.

இப்படி அவர்கள் முனையும்போது தங்கள் கவனம் முழுவதையும் அவற்றின்பால் செலுத்திப் பாழாக்கு கிறார்கள். உண்மையான சிறப்பம்சத்தை - இறைவனை யும் வானவர்களையும் சமீபிக்க உதவும் உண்மையான ஆற்றலை மறந்துவிடுகிறார்கள். இந்த ஆற்றல்தான் இறையறிவு; அதை யொத்ததே உரிமை - காமத்தின் தளையை விட்டுத் தனித்துள்ள உரிமை. அறிவைப்பற்றி மேலே விளக்கிவிட்டேன். உரிமையை இப்போது பார்ப்போம்.

**அடிமைத் தளையிலிருந்து உரிமை பெறுதல்:** காமத் தின் கொடிய பிடியிலிருந்தும் உலகத் துன்பங்களிலிருந்தும்



மனிதன் விடுபட்டு உரிமையோடிருக்க வேண்டும். சினத் தின் கட்டளையை உடைத்தெறிந்து உரிமை பெற வேண்டும். இவ்வாறு அவன் இவ்விரண்டை விட்டும் தனித்து நிற்கும்போது அவன் வானவர்களுக்கு ஒப்பா கிறான். அவர்கள் காமத்தால் தாக்கப்படமாட்டார்கள்; சினத்தால் சீரழியமாட்டார்கள். இவ்விரு உணர்ச்சிகளி லிருந்தும் விடுபட்டிருப்பது உண்மையான சிறப்பம்சமே. ஏனெனில் இந்த உரிமை வானவர்களின் தன்மைகளில் ஒன்றாகும்.

இறைவன் ஸ்திரத் தன்மையுடையவன்; அவன்மீது யாராலும் தன் சக்தியைச் செலுத்த முடியாது. எனவே ஒரு மனிதன் ஸ்திரத் தன்மை பெற்றவனாயிருந்தால் - இடை யூறுகளால் மனம் தளராதவனாயிருந்தால் அவன் இறைவ னைச் சமீபிக்கிறான்; வானவர்களுக்கு ஒப்பாகிறான். இவன் இறை சந்நிதானத்தில் மகத்தான பதவிக்குரியவன். இது சக்திச் செல்வம், அறிவுச் செல்வம் ஆகிய இரண்டுக்கும் அப்பால் மூன்றாவது சிறப்பம்சம். ஆக, சிறப்பம்சங்கள் மூன்று: அறிவு, சக்தி, உரிமை. இவற்றில் அறிவும் உரிமை யும் என்றும் பயனளிக்கத் தக்கவை. மரணத்தால் அவை மறைந்துவிட மாட்டா. மரணத்திற்குப் பிறகும் சிறப்புடன் நிலைத்து நின்று அவை இறையண்மைக்கு வழி காட்டும்.

அறியாதவர்கள் எப்படிக் கவிழ்ந்துவிட்டார்கள் என்று பார்! குருடர்களைப்போன்று அவர்கள் குப்புற விழுந்து கிடக்கிறார்கள். பொருளாலும் பதவியாலும் தங்கள் சக்தியை வலுப்படுத்திக் கொள்ள முனைகிறார்கள். இது ஒப்புக்கொள்ள முடியாத சிறப்பம்சம். அப்படியே ஒப்புக் கொண்டாலும் அதற்கு நிரந்தரத்துவம் கிடையாது.

காமத்திலிருந்தும் உலக ஆசாபாசங்களிலிருந்தும் விடுபட்டு நிற்கும் உரிமை நிலையை அவர்கள் வெறுத்தொதுக்கி விட்டார்கள்; நிரந்தரத்துவம் பெறக்கூடிய அறிவை - இறையறிவை உதறித் தள்ளிவிட்டார்கள். இவர்கள் மறுமையை இம்மைக்குப் பதிலாக விற்றுவிட்டார்கள். இவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனை குறைக்கப்படாது. இவர்களுக்கு எத்தகைய உதவியும் கிடைக்காது.

"பொருளும் மக்களும் உலகின் அலங்காரப் பொருள். நிலையான நன்மைகள்தாம் உம் நாயனிடம் சிறந்தவை..." என்று இறைவன் கூறுவதை இவர்கள் உணரவில்லை. அறிவும் உரிமையும்தான் நிலையான நன்மைகள். இவை என்றென்றும் நிலைத்து நிற்பவை, மரணத்தால் அழியாத நன்மைகள் இவைகள் தாம்.

இதிலிருந்து, பொருளாலும் பதவியாலும் உண்டாக்கப் படும் ஆற்றல் உண்மையான சிறப்பம்சமல்ல, அதன் பொய்த் தோற்றமே என்று அறிகிறாயல்லவா? இதைக் குறிக்கோளாகக் கொண்டு இதனை அடைவதற்கு முயற்சி செய்பவன் முட்டாள்!

இறைவனே! நன்மைக்கு வழி வகுத்தவர்களில் எங்களை ஆக்குவாயாக!

❑ ● ❑

# 7. புகழுக்குரிய பதவி

மக்களின் மனத்தை உடைமையாக்கிக்கொண்டு அவர்கள்மீது அதிகாரம் செலுத்தும் தன்மையை நாம் பதவி என்று குறிப்பிடுகிறோம். பொருளுக்கு இருக்கும் தன்மைகள் பதவிக்கும் இருக்கின்றன. இது உலக வாழ்க்கைக்குத் தேவையானவற்றில் ஒன்று. அதோடு இது பொருளைப் போலவே மரணத்துக்குப் பிறகு எத்தகைய பயனும் தராது. இம்மை என்பது மறுமையின் வயல். இந்த வயலிலிருந்து மறுமைக்கு வேண்டியவற்றை உற்பத்தி செய்து கொள்ள லாம். உலகில் உண்டாக்கப்பட்ட ஒவ்வொன்றையும் மறுமைக்குப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

உணவு, உடை முதலியவற்றை அடையக் குறிப்பிட்ட அளவிற்குப் பொருள் தேவைப்படுவதுபோன்று, மக்களோடு கலந்துறவாடி வாழ்வதற்குக் குறிப்பிட்ட அளவிற்கு மதிப்பும் பதவியும் தேவைப்படுகின்றன. மனிதனால் உணவின் தேவையை ஒதுக்கிவிட முடியாது. உணவையோ அதைப் பெறுவதற்குப் பொருளையோ அவன் விரும்பு கிறான்.

இது போலவே தன் பணிவிடைக்கென்று பணியாள் ஒருவனைத் தேடுகிறான். உதவி புரியும் நண்பன், நேர்வழி காட்டும் ஆசிரியர், கயவர்களின் தீங்குகளைத் தடுக்கும் அரசன் இவர்கள் அனைவரின்பாலும் அவன் மதிப்புடன் வாழத் தேவை ஏற்படுகிறது. தனக்கு அடிபணிந்து பணி புரியும் எண்ணம் பணியாளின் உள்ளத்தில் ஏற்பட வேண்டும் என்று விரும்புவதும், தன்னோடு நல்ல முறையில் பழகுவதற்கும் தனக்கு உதவி புரிவதற்கும் தேவையான மனோநிலை நண்பனுக்கு ஏற்பட வேண்டும் எனறு விரும்புவதும் இழிவிற்குரிய குணங்களல்ல.

ஆசிரியர் தனக்குப் போதிப்பதிலும் நேர்வழி காட்டு வதிலும் அக்கறை காட்ட வேண்டும் என்று ஆசைப்படுவ திலோ, தனக்கு ஏற்படும் தீங்குகளைத் தடுப்பதில் அரசன் கவனம் செலுத்த வேண்டும் என்று ஆவல் கொள்வதிலோ தவறில்லை. ஏனெனில், பதவி என்பது பொருளைப் போலவே வாழ்க்கைக்கு வேண்டிய கருவியாகும். இவ் விரண்டிற்கு மிடையில் அப்படி ஒன்றும் வித்தியாச மில்லை. இவ்விரண்டையும் அவற்றினால் ஏற்படும் பயனை நோக்கமாக வைத்துத்தான் விரும்ப வேண்டுமே தவிர, அவற்றை அவற்றிற்காகவே விரும்பக் கூடாது.

இந்த நேர்மையான முறையை யொட்டி ஒரு மனிதன் பொருளையும் பதவியையும் விரும்புவது தன் தேவைக் கென்று தன் வீட்டிலேயே ஒரு நீர்த்தொட்டி இருக்க வேண்டும் என்று விரும்புவது போலத்தான் இருக்கும். மலஜல உபாதைகளுக்கும் இதர காரியங்களுக்கும் நீர் தேவைப்படுகிறது. எனவே அவன் அப்படி விரும்புகிறான். என்றாலும், இந்தத் தேவைகளை அவன் வேறு ஏதேனும் ஒரு முறையில் முடித்துக்கொள்ளும்போது மேற்குறிப் பிட்ட ஆசையும் தவிடு பொடியாகிவிடும்.



இதில் நுட்பமான வித்தியாசம் உண்டு. உதாரணத்தின் மூலம் அதை நன்கு புரிந்துகொள்ளலாம்.

காமத்தைத் தணித்துக் கொள்வற்குப் பயன்படுகிறாள் என்ற காரணத்தால் ஒருவன் தன் மனைவியை விரும்பு கிறான் என்று வைத்துக்கொள்! அவன் காம உணர்ச்சி வேறு ஏதேனும் ஒரு முறையால் தணியும்போது அவன் மனை வியை வெறுக்க ஆரம்பித்து விடுவான் - நீரின் தேவை யற்றவன் நீர்த் தொட்டியை வெறுப்பதுபோன்று!

மற்றொருவன் தன் மனைவியை அவளுக்காகவே விரும்புவதாக வைத்துக்கொள்! அவன் காம உணர்ச்சி குறைந்தாலும் அவன் தன் மனைவியை முன்போலவே விரும்பத்தான் செய்வான். இந்த அன்பு முந்தியதைப் போன்றதல்ல. இரண்டிற்கு மிடையில் வித்தியாசமுண்டு.

இதே போன்று மனிதன் பொருளையும் பதவியையும் மேற்குறிப்பிட்ட இரண்டு வகைகளாக விரும்புவதுண்டு. வாழ்க்கைக்கு வேண்டியவற்றை அடையப் பயன்படு கின்றன என்ற காரணத்தால் அவற்றை விரும்புவதில் தவறில்லை. அவற்றை அவற்றிற்காகவே விரும்புவது இழி குணம்; வெறுப்பிற்குரிய தன்மை. வாழ்க்கையின் அத்தியாவசியமான தேவைகளைத் தவிர்த்து மற்ற வீண் காரியங்களை அவற்றின் உதவியால் சாதித்துக்கொள்ள விரும்புபவனைப் 'பாவி', 'குற்றவாளி' என்றுதான் வர்ணிக்க வேண்டும். மாற்றாள் புணர்ச்சிக்கு அவற்றை அவன் பயன்படுத்தும்போது அவனுக்கு வேறு பெயர் கிடைக்கும்.

பொய்,மோசடி, களவு முதலியவற்றின் உதவியால் பொருள் தேடக்கூடாது. இறை வணக்கத்தைக் கருவியாக வைத்துக்கொண்டு பதவியையும் மதிப்பையும் தேடுவது மார்க்கத்தில் தடுக்கப்பட்டது. 'ஹராம்!' இந்த இடத்தில் தான் முகஸ்துதி வெளிப்படுகிறது. முகஸ்துதியைப் பற்றிய விளக்கம் உரிய இடத்தில் வரும்.

நீ கேட்கலாம்:

''ஆசிரியர், பணியாள், நண்பன், அரசன் முதலியோரின் உள்ளங்களில் தனக்கு மதிப்பும் மரியாதையும் உண்டாக வேண்டும் என்று விரும்புவதில் தவறில்லை. இதை நீங்களே விளக்கியிருக்கிறீர்கள். பொதுவாக இது ஆகும் காரியமே. எனவே குறிப்பிட்ட அளவிற்கு குறிப்பிட்ட முறையில் அவற்றை விரும்புவது தவறல்ல!''

விடை தருகிறேன்: மதிப்பையும் மரியாதையையும் ஒரு மனிதன் விரும்பும்போது அவன் மூன்று வழிகளைக் கையாள்கிறான். இவற்றில் ஒன்று தவறான வழி, மற்ற இரண்டும் நேர்மையான வழிகள்.

**தவறான வழி:** தன்னிடம் இல்லாத ஒரு குணத்திற்காக மக்கள் தனக்கு மதிப்பும் மரியாதையும் அளிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு. அறிவற்ற ஒருவன் தன்னை மக்கள் 'அறிஞன்' எனப் பாராட்டவேண்டும் என்று எதிர்பார்ப்பது, மார்க்கத்தின் வரம்புகளை உடைத்தெறிந்து விட்டு மனம்போனபடி நடக்கும் ஒருவன் தன்னை மக்கள் 'வரம்பு மீறாதவன்' எனப் புகழவேண்டும் என்று ஆவல் கொள்வது, சாதாரண மனிதன் ஒருவன் தன்னை எல்லோரும், 'உயர் குலத்தோன்' என்று வர்ணிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது இவை அனைத்தும் தவறான வழிகளே. இதில் பொய்யும் பித்தலாட்டமும் கலக்கின்றன.



**நேர்மையான வழிகள்:**

1. தன்னிடம் குடிகொண்டிருக்கும் ஒரு தன்மைக்காக மக்கள் தனக்கு மதிப்பளிக்கவேண்டும் என்று எதிர் பார்ப்பதில் தவறில்லை. இதற்கு நபி யூசுப் (அலை) அவர் களை உதாரணமாகக் கொள்ளலாம். ''இறைவனே! உலகின் செல்வங்களுக்கு என்னைப் பொறுப்பாளிக்குவாயாக! நான் கண்காணித்துக் காப்பாற்றக் கூடியவன்; விஷயங்களை அறிந்தவன்'' என்று கூறினார்கள்: இந்தப் பதவியை அவர்கள் விரும்பினார்கள். அதற்கு தேவையும் இருந்தது. அதே சமயத்தில் அவர்கள் தங்கள் கூற்றையும் நிருபித்துக் காட்டிவிட்டார்கள். இந்த இடத்தில் பொய்யோ பித்த லாட்டமோ கிடையாது - உண்மை பிரதிபலிக்கிறது.

2. தன் அந்தஸ்து குறைந்துவிடுமோ என்று அஞ்சித் தன்னிடம் குடிகொண்டிருக்கும் இழி குணங்களையும் தான் செய்த குற்றங்களையும் மறைக்க முற்படுவது தவறல்ல. இது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதுதான். இழி தன்மை கள் மீது திரைபோட முற்படுவது தவறான செயலல்ல. ஒரு மனிதனின் இழி குணங்களையும் குற்றங்களையும் மர்மங் களையும் அம்பலப்படுத்துவதுதான் தவறு. இதில் புரட்டு ஒன்றுமில்லை. மக்கள் அறிந்து கொள்வதால் எத்தகைய பயனும் ஏற்படாத தன்மைகள் மூடி மறைக்கப்படுகின்றன. அவ்வளவுதான்.

தான் சாராயம் அருந்தும் சுபாவமுள்ளவன் என்பதை ஒருவன் அரசனுக்கெதிரில் மறைக்க முற்படுகிறான்; தான்

நல்லவன் என்று காட்டிக் கொள்கிறான். இப்படி அவன் கூறும்போது அவன் நல்லவன் என்பதை அரசன் ஒப்புக்கொண்டே தீரவேண்டும் என்பதில்லை. என்றாலும், 'அவன் சாராயம் அருந்தும் சுபாவமுள்ளவன்' என்ற உண்மை மறைக்கப்படுகிறது. இதை அரசன் அறிந்து கொள்வதில் பயனில்லையல்லவா? இதில் தவறு ஒன்றுமில்லை.

என்றாலும், அரசனின் நல்லெண்ணம் அதிகரிக்க வேண்டும் என்ற காரணத்தால் அவன் எதிரில் மிகவும் சிறந்த முறையில் இறை வணக்கம் நடத்த முற்படுவது தவறு. இதில் முகஸ்துதி முளைத்து விடுகிறது. இப்படி அவன் நடந்து கொள்வதால் அரசன் புரட்டில் மயங்கி விடுகிறான். அந்த மனிதனை, 'அவன் இறைவனுக்கு அஞ்சிக் கலப்பற்ற முறையில் வழிபடுபவன்' என்று கருதத் தலைப்படுகிறான். இதில்தான் புரட்டு உண்டு. முகஸ்துதிக்கு வணங்குபவன் எப்படிக் கலப்பற்ற வணக்கம் புரிய முடியும்?

இந்த வழியில் மதிப்பையும் அடைய முயற்சி செய்வது கூடாது. இப்படி மதிப்படைய விரும்புவது, அனுமதிக்கப் படாத பொருளை அடைய விரும்புவது போன்றது. பிறர் பொருளை மோசடியின் மூலம் அபகரிப்பது தவறான காரியமாயிருப்பது போன்று பிறர் உள்ளத்தை மேற்குறிப்பிட்ட மோசடியின் மூலம், புரட்டின் மூலம் அபகரிப்பதும் தவறான காரியமே. இன்னும் சொல்லப்போனால், பிறர் உள்ளத்தை அபகரிப்பது பிறர் பொருளை அபகரிப்பதை விடக் கொடியதாகும்!

❑ ● ❑

# 8. மூல காரணங்கள்

மனிதன் பெருமையையும் மதிப்பையும் விரும்புகிறான். இகழ்ச்சியையும் நிந்தனையையும் வெறுக்கிறான். இது மனிதனின் மனோநிலை. இதற்கு நான்கு காரணங்கள் சொல்லலாம்.

**1. இது பலமான காரணம்:** சிறம்பம்சத்தை உள்ளம் உணர்கிறது. இந்த உணர்வுதான் முதல் காரணம். சிறப்பம்சம் விரும்பப்படுவதற்குரியது என்று முதலிலேயே விவரித்து விட்டேன். அந்தச் சிறப்பம்சத்தை அடையும் போது இன்பம் ஏற்படுகிறது. சிறப்பம்சம் தன்னிடம் உண்டு என்பதை ஒரு மனிதன் எண்ணிப்பார்க்கும் அந்த எண்ணத்தில் அவன் இன்பம் காண்கிறான்; மகிழ்ச்சியடைகிறான். புகழுரை என்பது புகழப்பட்டவனின் தன்மையைச் சுட்டிக் காட்டுகிறது. அப்படி ஒருவன் தன்னிடமுள்ள உயர் தன்மையை அறியும் போது பேரின்பம் கொள்கிறான்.

இந்தச் சிறப்பம்சம் இரண்டு விதங்களில் அமையலாம். ஒன்று, இது பகிரங்கமாக வெளித்தோற்றத்திலேயே அமையலாம். அல்லது, உண்மையான பூரணத் தன்மை

தானா என்று சந்தேகம் ஏற்படுமாறு அது அமையலாம். விரிவாக எழுதுகிறேன். அப்போதுதான் இவற்றை நன்கு உணர்ந்துகொள்ள முடியும்.

வெளித்தோற்றத்தில் அமைந்திருக்கும் சிறப்பம்சம் குறித்துப் பாராட்டும்போது, அதனால் ஏற்படும் இன்பம் மிகவும் குறைவு. எனினும் இதில் இன்பமே இல்லாமற் போய் விடாது. உதாரணமாக, 'கம்பீரத் தோற்ற முடையவன்', 'வெண்மையான சருமமுடையவன்' என்று ஒருவன் பாராட்டப்படும்போது, அவன் சிறிதளவேனும் இன்புறத்தான் செய்வான். ஏனெனில், இவை இரண்டும் சிறப்பம்சங்கள். என்றாலும், இந்த அம்சங்களை உள்ளம் அநேகமாக மறந்து விடுகிறது. இதனால் இவற்றின் இன்பமும் கணிசமான அளவிற்குக் குறைந்துபோகிறது. எப்படியாயினும் அந்தத் தன்மைகளைப் பற்றி எண்ணிப் பார்க்கும்போது அந்த எண்ணத்தைத் தொடர்ந்து சிறிதளவு இன்பமும் ஏற்படத்தான் செய்யும்.

சந்தேகப்படும்படி அமைந்திருக்கும் சிறப்பம்சங்களி னால் ஏற்படும் இன்பம் மிகவும் அதிகம். ஒரு மனிதன் 'அறிஞன்', 'நல்லவன்' என்று பாராட்டப்படும்போது அவன் பேரின்பமடைகிறான். ஏனெனில், இந்தத் தன்மை களைப் பற்றி மனிதன் சில வேளைகளில் சந்தேகப்பட ஆரம்பித்து விடுகிறான். ''நான் உண்மையிலேயே அறிஞன் தானா?'' என்றும், ''உண்மையிலேயே நான் நல்லவன் தானா?'' என்றும் தனக்குத் தானே அவன் சில வேளை களில் கேட்டுக் கொள்ளவேண்டியிருக்கிறது!

எனவே அந்தச் சந்தேகத்தை அவன் அகற்ற முற்படு கிறான். தான் உண்மையிலேயே நிகரற்ற அறிஞனாகத் திகழ



வேண்டும் என்று ஆசைப்படுகிறான்; இதனால் அவனைப் பிறர் 'அறிஞன்' என்றழைக்கும்போது, பாராட்டும்போது பேரின்பமடைகிறான். இப்படி ஏற்படும் இன்பம் எல்லாச் சமயங்களிலும் ஏற்பட்டுவிடாது. எந்த மனிதன் பாராட்டி னாலும் பேரின்பம் ஏற்பட்டுவிடும் என்று கூற முடியாது. அந்தச் சிறப்பம்சங்களை நன்கு உணர்ந்த ஒருவன் பாராட் டும்போதுதான் பேரின்பம் உண்டாக முடியும். மாணவன் ஒருவன், தன் ஆசிரியர் தன்னை 'கூரிய மதியுடையவன்', 'நல்லதைத் தேர்ந்தெடுப்பவன்' என்று பாராட்டுவது கண்டு இன்பமடைகிறான். மாணவனின் நிலையை ஆசிரியர் அறியாதிருக்க முடியுமா? ஆசிரியர் இந்தச் சிறப்பம் சங்களை நன்கு அறிந்தவர் என்பதில் ஐயமில்லை. ஆனால் அந்தத் தன்மைகளைப் பற்றி அறியாத மூடன் ஒருவன் பாராட்டும்போது மேற்குறிப்பிட்ட அளவிற்கு இன்பம் ஏற்படாது.

மேற்குறிப்பிட்ட உணர்வின் காரணமாகத்தான் மனிதன் இகழ்ச்சியையும் நிந்தனையையும் வெறுக்கிறான். ஏனெனில் இவை சிறப்பம்சங்களல்ல - குறையம்சங்கள்; இழி தன்மைகள். அவை தன்னிடம் இருப்பதை எண்ணிப் பார்க்கும்போது வருத்தம் ஏற்படுகிறது. இந்த இழி குணங் களைப் பற்றி நன்கு அறிந்த ஒருவன் மற்றொருவனை இழித்துரைக்கும்போது, இழித்துரைக்கப்பட்டவனின் உள்ளத்தில் பெரும் வருத்தம் தலை தூக்குகிறது - நன்கு அறிந்த ஒருவன் பாராட்டும் போது பேரின்பம் ஏற்படுவது போன்று.

2. ''பாராட்டுபவனின் உள்ளம் பாராட்டப்படுபவனின் சிறப்பம்சத்திற்குக் கட்டுப்பட்டு விட்டது'' என்ற உண்மை

யைப் பாராட்டுரை காட்டுகிறது. இது இரண்டாவது காரணம். இப்படிப் பிறர் உள்ளத்தைத் தன் ஆற்றலால் கட்டுப்படுத்திக் கொள்வது விரும்பப்படும் அம்சமே. இந்த அம்சம் தன்னிடம் இருப்பதை ஒரு மனிதன் அறியும்போது அவன் பெரு மகிழ்வடைகிறான். அரசர்கள், பெரியவர்கள் முதலிய சக்தி வாய்ந்தவர்களிடமிருந்து பாராட்டுரை வெளிப்படும்போது, அதனால் ஏற்படும் இன்பம் பன் மடங்காகிறது.

எத்தகைய சக்தியுமில்லாத, யாராலும் பொருட் படுத்தப்படாத ஒருவனிடமிருந்து அந்தப் பாராட்டுரை வெளிப்படும்போது, அதனால் ஏற்படும் இன்பம் பல மடங்கு சுருங்குகிறது. ஏனெனில், இத்தகைய மனிதனின் உள்ளத்தை ஆட்கொள்வது சாதாரணக் காரியம். இவனது பாராட்டுரை மிகச் சாதாரணச் சக்தியைத்தான் சுட்டிக் காட்டும்.

இதனால்தான் சக்தி வாய்ந்தவர்கள், மதிப்பு நிறைந்த வர்கள் நிந்திக்கும்போது துன்பம் விளைகிறது. ஏனென் றால் இந்த நிபந்தனையால் மனிதன் பெரு மதிப்பை இழந்து விடுகிறான்.

3. பாராட்டுரையின் காரணமாக ஒரு மனிதன் பலரு டைய உள்ளத்தை ஆட்கொள்ள முடியும். இது மூன்றாவது காரணம். குறிப்பாக, ஒருவன் பலர் முன்னிலையில் பாராட் டப்படும்போது, அங்குள்ளவர்கள் அந்தப் பாராட்டுரைக் குச் செவிமடுத்து அதை நம்புகிறவர்களாயிருந்தால், பாராட்டப்பட்டவனின் புகழ் வானளாவ உயர்ந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. அதிகமான அளவில் பாராட் டுரை வெளிப்படும் போதும் அதைக் கேட்கும் மக்களின்



தொகை விரிவடையும் போதும் பாராட்டப்பட்டவனின் புகழ் இன்னும் ஒருபடி உயர முடியும். ஆனால் இது போன்ற நிலைமைகளில் வெளிப்படும் நிந்தனை, நிந்திக்கப்பட்டவனின் உள்ளத்தைக் கடுமையாகத் தாக்கும் ஆற்றலுடையது.

4. பாராட்டுரை ஓர் உண்மையை மறைமுகமாக எடுத் துரைக்கிறது: 'பாராட்டப்பட்டவன் சக்தி வாய்ந்தவன். அந்தச் சக்தியால் அவன் மற்றவனின் நாவைத் தன்னைப் பாராட்டுமாறு செய்துவிட்டான்.

இந்தச் சக்தி தன்னிடம் இருப்பதை எண்ணிப் பார்க்கும் போது மனிதன் அவசியம் இன்பமடைவான், மனத்தில் ஒன்றை வைத்துக்கொண்டு பிறர் அவனை நாவளவில் பாராட்டினாலும் இந்த இன்பம் ஏற்படத் தவறாது. ஏனென்றால் பிறர் அவனைப் பற்றி மனத்திற்குள் எது வேண்டுமானாலும் எண்ணிக் கொள்ளட்டும். ஆனால் பிறர் நாவைத் திருப்பி அவனைப் பாராட்டச் செய்தது ஒரு சக்திதானே! அந்தச் சக்தியை எண்ணி அவன் இன்பம் காண்கிறான்.

ஒரு மனிதன் மற்றவனைப் பாராட்டும்போது மேற் குறிப்பிட்ட நான்கு காரணங்களும் ஒன்று சேர்ந்து அமைந்திருக்கும்.

தன்னிடமுள்ள சிறப்பம்சத்தை உணர்வதுதான் முதல் காரணம். இதனால் எந்த யோக்கியதையும் இல்லாத ஒருவன் 'அறிஞன்', 'மேற்குலத்தோன்', 'வரம்பு மீறாத வன்', 'தயாளன்' என்று பாராட்டப்படும்போது அதனால் அவனுக்கு இன்பம் ஏற்படாது. ஏனெனில் இந்த அம்சங்கள் தாம் அவனிடமில்லையே. ஆனால் அவன் மற்றவர்களின்

உள்ளத்தையும் நாவையும் தன் பாராட்டின்பால் திருப்பி விட்டதன் சக்தி குறித்து இன்பமடையலாம். தான் நம்பாத ஒன்றை வெளியில் கூறி வாயளவில் ஒருவன் பாராட்டினாலும் இத்தகைய இன்பம் ஏற்பட முடியும். அச்சத்தின் காரணமாகவோ விளையாட்டின் போக்கிற்காகவோ பாராட்டுரை நிகழ்த்தும் போது இன்பம் உண்டாகாது. இந்தப் பாராட்டுரையில் கேலியும் கிண்டலும் கலந்திருக்கின்றன.

மனிதன் பாராட்டை ஏன் விரும்புகிறான், நிந்தனையை ஏன் வெறுக்கிறான் என்பதற்குரிய மூல காரணங்களை விவரித்துவிட்டேன். பதவி மோகத்தையும் நிந்தனை வெறுப்பையும் எப்படி அகற்றுவது என்பதைத் தெளிவு படுத்தவே இதை இங்கு எழுதினேன். காரணத்தை அறியாது எந்த வியாதிக்கும் சிகிச்சை செய்ய முடியாது. 'சிகிச்சை' என்றால் வியாதிக்குரிய மூல காரணத்தை அகற்றுவது என்று தான் பொருள்.

இறைவனே! நன்மைக்கு அருள்வாயாக!

❑ ● ❑

# 9. பதவிக்கு மருந்து

பதவி மோகம் கொண்டவன் மக்களிடம் பொதுவாக நெருங்கிப் பழகி அன்பு செலுத்துவதில் கவனம் செலுத்த மாட்டான். அவர்களிடம் தன் மதிப்பும் மரியாதையும் உயர்வதற்குத் தகுந்தாற்போல்தான் அவன் எப்போதும் உரையாடுவான், செயலாற்றுவான். இதுதான் நயவஞ்சகத்தின் வித்து. இதுதான் அடிப்படையான தவறு. இதன் விளைவாக இறை வணக்கத்தை அலட்சியப்படுத்தும் மனப்பான்மை கண்டிப்பாய் ஏற்பட்டுவிடும். மக்களின் உள்ளத்தைக் கவருவதற்காகத் தவறான பல செயல்களைச் செய்யவும் துணிவு பிறக்கலாம்.

இதனால் தான் அண்ணல் நபியவர்கள், பொருளாலும் பதவியாலும் ஏற்படும் விளைவை, இரண்டு கொடிய ஓநாய்களால் ஏற்படும் விளைவுக்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்கள். ''நீர் கீரையை உற்பத்தி செய்வதுபோல் பதவி மோகம் நயவஞ்சகத் தன்மையை உற்பத்தி செய்துவிடும்'' என்றும் கூறியிருக்கிறார்கள்.

நயவஞ்சகம் என்றால் அகமும் புறமும் ஒன்றுக்கொன்று முரண்படுதல் என்றுதான் பொருள். மக்களின் மதிப்பைக் கவர விரும்புபவன் மக்களிடம் நயவஞ்சகத் தனத்தோடுதான் பழக்கிக் கொள்கிறான். தன்னிடமில்லாதத் தன்மைகளைத் தன்னிடம் இருப்பதாகக் காட்டிக் கொள்கிறான். இதுதான் நயவஞ்சகம். இப்படிப் பார்க்கும் போது பதவி மோகம் என்பது மனிதனைப் பாழ்படுத்தும் கொடிய தன்மை என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

எனவே இந்தக் கொடிய பிணிக்குச் சிகிச்சை செய்து அதை உள்ளத்தை விட்டு அப்புறப்படுத்தவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இது மனிதனின் இயற்கை. பொருளை விரும்புவதுபோல் அவன் பதவியையும் விரும்புகிறான்.

இந்தப் பிணிக்கு மருந்து உண்டு. அந்த மருந்து இரண்டு பொருள்களால் - மூலிகைகளால் உண்டாக்கப்பட்டது; ஒன்று அறிவு, மற்றொன்று செயல்.

**அறிவு:** தன் பதவி மோகப் பிணியை அகற்ற விம்புபவன் முதலில், மனிதன் பதவியை விரும்புவதற்குரிய காரணத்தை அறிய வேண்டும். மனிதர்களையும் அவர்களின் உள்ளங்களையும் ஆட்டிப் படைக்கும் சக்தி பதவிக்கு உண்டு. இந்தச் சக்தியின் காரணமாகவே மனிதன் பதவியை விரும்புகிறான். ''இந்தச் சக்தி என்னதான் உயர்ந்திருந்தாலும் அது மரணத்தோடு முடிவடைந்து விடுகிறது. அதற்கு நிரந்தரத்துவம் கிடையாது'' என்று மேலே விவரித்தாகி விட்டது.

உன் சக்திக்கு அஞ்சி உலகிலுள்ள அனைவரும் மேற்கிலிருந்து கிழக்குவரை வாழும் எல்லோரும் தலை வணங்கிய போதிலும் அவர்கள் எல்லோரும் அரை நூற்



றாண்டுக்குள் அழிந்துபோய்விடுகிறார்கள். மதித்தவனும் மதிக்கப்பட்டவனும் மடிந்து போய்விடுகிறார்கள். உனக்கு முன்னர் இவ்வுலகில் மதிப்பும் மரியாதையுமாக வாழ்ந்தவர்களும் அவர்களுக்கு அடிபணிந்தவர்களும் எப்படி மாண்டார்களோ, அப்படியே நீயும் உனக்கு அடிபணிந்தவர்களும் மாள நேரிடும். இதையெல்லாம் நீ நன்கு கவனித்துக்கொள்ள வேண்டும். நிரந்தர வாழ்க்கைக்கு அவசியமான அறவழியை விட்டுவிடக் கூடாது. அந்த வாழ்க்கை என்றுமே அழியாது.

உண்மையான சிறப்பம்சம் எது, அதன் பொய்த் தோற்றம் எது என்று ஒரு மனிதன் அறிந்துகொண்டுவிட்டால் அவன் பதவியையும் அந்தஸ்தையும் மதிக்க மாட்டான்; அவற்றை அற்பம் என்று கருதுவான். ஆனால் இப்படி எல்லோரும் கருதிவிடுவது சாத்தியமில்லை. மறுமையை நேரில் காண்பதுபோல் தெளிவாகக் கண்டு, இம்மையை அற்பமாக மதிக்கும் மனிதனைத்தான் அப்படிக் கருத முடியும். இத்தகைய மனிதனை மரணம் அணுகும்போது அதை அவன் கிடைத்தற்கரிய பேறு என்றே எண்ணுவான். அப்போது அவன் தனிப்பட்ட நிலையை அடைந்து விடுவான். அதுபோன்ற நிலையைத் தான் ஹஸன் பஸ்ரீ (ரஹ்) அவர்கள் அடைந்திருந்தார்கள். அவர்கள் ஒரு சமயம் உமர் பின் அப்துல் அஸீஸ் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் அடியற்கண்ட சில வரிகள் காணப்பட்டன.

''மரணம் விதிக்கப்பட்டு மாண்டவர்களில் நீங்கள் தாம் கடைசி நபர் என்று எண்ணத் தோன்றுகிறது. அவர்கள் எதிர்காலத்தை எந்தக் கண்ணோட்டம் கொண்டு பார்த்தார்கள் என்று சிந்தித்துப் பாருங்கள்!''

உமர் அவர்களும் இதே நிலையில்தான் இருந்தார்கள். ''நீங்கள் இம்மையின் விஷயத்தில் பொறுப்பற்றிருக் கிறீர்கள்; மறுமையின் விஷயத்தில் இலயித்துப் போயிருக் கிறீர்கள்'' என்று விடையிறுத்தார்கள்.

மேற்குறிப்பிட்ட அறிஞர்கள் மறுமையைக் குறிக் கோளாகக் கொண்டு முன்னேறினார்கள். மறுமைக்காகவே அவர்கள் இறையச்சம் பூண்டு செயலாற்றினார்கள். ஏனெனில் மறுமையில் இறையச்சம் கொண்டவர்தாம் பெருமையடைய முடியும் என்று அவர்களுக்குத் தெரியும். எனவே அவர்கள் இம்மையிலுள்ள பொருளையும் பதவி யையும் அலட்சியப்படுத்தினார்கள்.

மக்களில் பெரும்பாலோர் குறுகிய பார்வையுடையவர் களே. அவர்களின் பார்வை இம்மையோடு சுருங்கிக் கொண்டு விட்டது. மறுமையை ஊடுருவிப் பார்க்கும் ஆற்றல் அவர்களிடம் கிடையாது.

இவர்களைப் பற்றித்தான் இறைவன், 'அவர்கள் இம் மையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். மறுமை அதை விட நல்லது; நிரந்தரமானது'' என்று குறிப்பிடுகிறான்.

மீண்டும் கூறுகிறான்: ''நீங்கள் மறுமையை விட்டு விட்டு இம்மையை விரும்புகிறீர்கள்!''

இத்தகைய நிலைமையில் ஒரு மனிதன் இருந்தால் அவன் தன் வியாதிக்கு வைத்தியம் செய்துகொள்ள வேண் டும். நல்ல முறையில் அவன் சிந்திக்க வேண்டும். உலகில் பெரும் பதவி வகித்து வாழ்ந்தவர்களின் வாழ்க்கையை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் பொறாமைக்கும் இடையூறுக்கும் இடையில் தடுமாறினார்கள். அவர்களைத்



துன்புறுத்தப் பலர் காத்திருந்தனர். தங்கள் பதவி குறித்து அவர்கள் நிரந்தரமாக நடுங்கிக் கொண்டிருந்தார்கள். மக்களின் உள்ளத்தில் தங்களுக்கு இருக்கும் மதிப்பு எங்கே மாறிவிடுமோ என்று சந்தேகமுற்று ஆவன செய்தார்கள். ஏனெனில், உள்ளம் அடிக்கடி மாறிக்கொண்டிருக்கும் தன்மையுடையது. ஒரு சமயம் அது ஒரு மனிதனை விரும் பும்; மறு சமயம் அவனை அது வெறுக்க ஆரம்பித்துவிடும். மக்களின் உள்ளத்தை அடிப்படையாக வைத்துச் செய்யப் படும் காரியம், கடலலையை அடிப்படையாக வைத்துச் செய்யப்படும் காரியம் போன்றது.

பிறர் உள்ளத்தை ஆட்கொள்ளும் விஷயத்தில் கவனம் செலுத்துவது, தன் மதிப்பைக் காப்பாற்றிக்கொள்ள முற்படுவது, பொறாமைக்காரர்களின் தாக்குதலிலிருந்து தப்புவது, விரோதிகளின் எதிர்ப்பிலிருந்து தற்காத்துக் கொள்வது இவை அனைத்தும் இம்மையோடு ஒட்டி வளர்ந்த துன்பங்கள், கவலைகள். இவை எப்போதும் பதவியைச் சூழ்ந்து நிற்கின்றன. பதவியை விரும்பும் ஒருவனால் அதன் துன்பங்களிலிருந்து தப்பிவிட முடியாது. மறுமையை எண்ணிப் பார்ப்பதற்குக்கூட அவனுக்கு நேரமிருக்காது.

ஆகவே மழுங்கிப்போன அகப் பார்வைக்குச் சிகிச்சை அளிக்கவேண்டிய தேவை ஏற்படுகிறது. தெளிந்த அகப் பார்வை கொண்டவன், பலமான நம்பிக்கை பூண்டவன் இம்மையின் பக்கம் திரும்பியும் பார்க்க மாட்டான். இதுதான் அறிவின் மூலம் செய்யப்படும் சிகிச்சை.

**செயல்:** அறிவின் உதவியால் மேலே கண்டபடி சிகிச்சை செய்யலாம். அடுத்தபடி செயல் முறையில்

சிகிச்சை செய்ய வேண்டும். மதிப்புக்கும் பதவிக்கும் பங்கமேற்படுத்தும் செயல்களில் ஈடுபட்டு மக்களின் உள்ளத்திலிருக்கும் மதிப்பைக் குறைக்கலாம். இதனால் மக்களிடம் உன் விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் மதிப்பு குறைவடையும்; அது குறித்து உனக்கு ஏற்படும் இன்பம் சுருங்கும். உன் உள்ளம் அமைதியையும் அடக்கத்தையும் விரும்பும். உன்மீது அன்பு செலுத்திய மக்கள் உன்னை வெறுத்துவிட்டு, உன்னைப் படைத்த இறைவன்மீது அன்பு செலுத்த முற்படுவார்கள்; அவனை மதிப்பார்கள்; அவனுக்குப் பெருமையளிப்பார்கள். இது 'மலாமிய்யா' என்ற வகுப்பார் கையாளும் முறை. அவர்கள் தங்கள் மதிப்பைக் குறைப்பதற்காகத் தவறான காரியங்களைப் பகிரங்கமாகவே செய்வார்கள். இதனால் அவர்கள் பதவிப் பிணியிலிருந்து, அந்தஸ்து நோயிலிருந்து தப்ப முடியும்.

ஆனால் இந்த முறையைக் கையாள்வது சரியல்ல. இதற்கு மார்க்கத்தில் அனுமதி கிடையாது. ஏனெனில், இத்தகைய முறையின் விளைவாக முஸ்லிம் பெருமக்கள் மார்க்கத்தின் வரம்புகளை அற்பமாக மதிக்கத் தலைப்பட்டு விடுவார்கள். இந்த முறையை யாரும் பின்பற்றி நடக்கக் கூடாது. அந்தஸ்தைக் குறைப்பதற்காகத் தவறான காரியங் கள் தாம் செய்ய வேண்டும் என்பதில்லை. மார்க்கத்திற்கு முரணில்லாத செயல்களாலேயே இந்தக் காரியத்தை முடித்துக்கொள்ள முடியும். தவறில்லாத எத்தனையோ காரியங்கள் மதிப்பைக் குலைக்கும் ஆற்றலுடையவையா யிருக்கின்றன.

ஒரு சமயம் ஓர் அரசன் துறவி ஒருவரைக் காண விரும்பினான். அரசனின் உள்ளத்தில் துறவிக்குப் பெரு



மதிப்புண்டு. இந்த மதிப்பைக் குலைக்க எண்ணினார் துறவி. எனவே ஒரு தந்திரம் செய்தார்.

உணவருந்தும் நேரம் வந்தது. உணவும் சமைத்த கீரையும் வந்தன. இருவரும் புசிக்கத் தொடங்கினார்கள். துறவியின் தந்திரம் இந்த இடத்தில்தான் வெளிப்பட்டது. உணவையே கண்டிராதவர்போன்று அவர் பேராசையுடன் உட்கொள்ள ஆரம்பித்தார். அதிக அளவில் உணவை அள்ளி எடுத்துப் புசிக்கத் தொடங்கினார்.

இதை அரசன் கவனித்தான். அவன் உள்ளத்தில் இன மறியாத ஒருவித வெறுப்பு வியாபித்தது. துறவி இதைத் தான் எதிர்பார்த்தார். ''உம்மிடமிருந்து என்னைத் திருப்பிய இறைவனே புகழுக்குரியவன்'' என்று பொருள் செறிவோடு கூறினார்.

இன்னும் சில துறவிகள் சாராயத்தின் நிறத்தையொத்த சுத்தமான பானத்தைப் பலர் முன்னிலையில் பருகியிருக் கிறார்கள். பார்ப்பவர்கள் அதைச் சாராயம் என்று எண்ணிக் கொள்வார்களல்லவா? அப்படி அவர்கள் எண்ணும்போது அதை அருந்துபவர்கள்மீது அவர்களுக்கிருக்கும் மதிப்புத் தானாகவே மறைந்துவிடும்.

இது நேர்மையான முறை, இந்த முறையைக் கைக் கொண்டு செயலாற்றுவதில் தவறில்லை.

இந்த முறையைப் பின்பற்றும் விஷயத்தில் சட்ட நூல்கள் தரும் கருத்துக்கள் எப்படியிருப்பினும், அறிஞர் களில் பலர் தங்கள் அந்தஸ்தைக் குறைத்துக் கொள்வதற்குச் சட்டநூல்கள் இடந்தராத செயல்களின் மூலம் பரிகாரம் தேடுகிறார்கள், இப்படித்தான் ஒரு துறவி செய்தார்.

அவர் துறவி. துறவி என்ற காரணத்தால் மக்கள் அவருக்குப் பெருமதிப்பளித்தார்கள். இந்த மதிப்பைக் குலைக்க எண்ணினார் துறவி. எனவே அவர் ஒருநாள் குளிக்கும் அறைக்குள் சென்று அன்னியன் ஒருவனுடைய ஆடையை வேண்டுமென்றே அணிந்துகொண்டு கடை வீதிக்கு வந்துவிட்டார். அவரையும் அவர் அணிந்திருந்த ஆடையையும் பலர் கவனித்தார்கள். அவரைப் பிடித்து அடித்தார்கள், ஆடையைப் பறித்தார்கள். 'திருடன்', 'அன்னியன் பொருளுக்கு ஆசைப்படுபவன்' என்று நிந்தித்தார்கள். இதன் பிறகு மக்கள் மன்றத்தில் அவருக்கும் மதிப்பு இருக்க முடியுமா? முடியாது. இதைத்தான் அவரும் விரும்பினார்.

பதவியை அறுத்தெறிவதற்குரிய வழி வகைகளிலேயே மிகவும் வலுவானது, மக்களை விட்டுப் பிரிந்து தனியிடம் ஒன்றை நாடுவதுதான். ஆனால் இந்த வழியில் பல இடையூறுகள் இருக்கின்றன. இப்படி மக்களை விட்டு ஒதுங்கியிருந்து செயலாற்றும்போது, இவ்வாறு ஒதுங்கி யிருப்பதிலேயே ஒரு விதக் கௌரவத்தை எதிர்பார்க்க நேரிடும். 'நான் தனித்திருந்து செயலாற்றுகின்றேன். பதவி மோகத்தை அறுத்தெறிகிறேன்' என்று சில சமயங்களில் அவன் எண்ணக்கூடும்.

அவன் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிறான். தன்னைப்பற்றி மக்கள் கொண்டிருக்கும் நல்லெண்ணத்தை மாற்றிக் கொள்வார்களாயின், தன்னை அவர்கள் இகழ ஆரம்பித்து விடுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறான். இதை எண்ணிப் பார்த்ததும் அவன் வருந்துகிறான்; அவஸ்தைப்படுகிறான்; இத்தகைய புழுதிப் படலத்தை



அவர்கள் உள்ளத்தில் நுழையவிடாமல் தடுக்க முனை கிறான்.

இதற்கு அவன் பொய்யையும் புரட்டையும் பயன் படுத்திக் கொள்கிறான். இந்தப் பொய்யையும் புரட்டையும் அவன் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை; மதிக்கவும் மாட்டான். அவன் மர்மமாகவே பதவியை விரும்புகிறான் என்பதற்கு இந்த அறிகுறிகள் போதிய ஆதாரங்கள். பதவியை விரும்புபவன் பொருளை விரும்புபவனைப் போன்றவன்தான் - ஏன், பதவிமோகம் பண மோகத்தை விடக் கொடியது. ஏனெனில், பதவி மோகத்தால் ஏற்படும் விளைவுகள் மிகவும் பயங்கரமானவை. மக்களிடமிருந்து அவன் எதையேனும் ஒன்றை எதிர்பார்க்கும்வரை அவனால் பதவியை வெறுக்க முடியாது.

தம் சம்பாத்தியத்தினால் அல்லது வேறு ஏதேனும் ஒரு முறையினால் தனக்குத் தேவையான உணவைப் பெற்றுக் கொண்டு மக்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்காத நிலை யில் ஒரு மனிதன் இருந்தால் அவன் இது விஷயத்தில் வெற்றி காணலாம். அவன் மக்களைப் பற்றிக் கவலைப்பட மாட்டான். அவர்களிடம் தனக்கு மதிப்பு உண்டா, இல்லையா என்று ஆராயமாட்டான்; பொருட்படுத்த மாட்டான் - மிக மிகத் தூரத்தில், கிழக்குக் கோடியில் வசிக்கும் மக்களின் மனோநிலையைப் பற்றி அவன் பொருட்படுத்தாததுபோன்று.

ஆக, உள்ளதை வைத்துக்கொண்டு திருப்தியடையும் மனிதனால் மட்டுமே மக்களின் அவசியத்தை அறவே அகற்ற முடியும். இப்படி ஒருவன் மக்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்காத நிலையை அடையும்போது அவன்

அவர்களின் மனோநிலையைப் பற்றியும் அபிப்பிராயத்தைப் பற்றியும் கவலைப்படமாட்டான். மக்கள் அளிக்கும் அந்தஸ்தை அவன் மதிக்க மாட்டான். எனவே உள்ளதைக் கொண்டு திருப்தியடையும் மனப்பான்மையால்தான் பதவி மோகத்தை முற்றிலும் அகற்ற முடியும். இத்தகைய மனப்பான்மை கொண்டவன் பதவியின் இழிவு குறித்து வந்துள்ள முன்னோரின் கருத்துக்களை உதவியாக்கிக் கொண்டு மற்ற விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டும். அவர்களின் வாழ்க்கையை ஆராயவேண்டும். இழிவை அவர்கள் ஏற்றுக்கொண்டு மறுமையில் அதற்குப் பதிலாகக் கிடைக்கும் பெரும்பேற்றை எதிர்பார்த்தார்கள்!

❑ ● ❑

# 10. சிகிச்சை முறை

பெரும்பாலோர் மக்களின் நிந்தனையைக் கண்டு நடுங்குகிறார்கள்; அவர்களின் பாராட்டை எதிர்பார்க்கிறார்கள். ஆகவே அவர்கள் ஒவ்வொரு செயலையும் நிந்தனைக்கு அஞ்சிப் பாராட்டை எதிர்பார்த்தே செய்கிறார்கள். இது கொடிய வியாதி. இதனால் பல விபரீதங்கள் ஏற்பட முடியும். இதை அகற்ற முற்படுவது அவசியம். அகற்றுவது எப்படி? முதலில் இதற்குரிய காரணங்களை ஆராய வேண்டும். இந்த மனப்பிணிக்குச் சில காரணங்களைக் கூறியிருக்கிறேன்.

உன்னை ஒருவன் பாராட்டும்போது உன்னிடம் பாராட்டத் தகுந்த சிறப்பம்சம் இருப்பதாக நீ உணர்கிறாய்- இது முதல் காரணம்.

எந்த அம்சம் குறித்து உன்னை மற்றவர்கள் பாராட்டுகிறார்களோ அந்த அம்சம் உன்னிடம் உண்மையிலேயே இருக்கின்றதா, இல்லையா என்று ஆராய்ந்து பார்! அப்படியே உன்னிடம் பாராட்டத் தகுந்த ஏதோ நல்லம்சம்

இருப்பதாகவே வைத்துக்கொள்! அந்த அம்சம் இரண்டு விதங்களில் அமையலாம். ஒன்று அது பாராட்டுரைக்குத் தகுதியானதாக இருக்கலாம். அறிவை இதற்கு உதாரண மாகக் கொள்ளலாம். அறிவு என்பது பாராட்டத் தகுந்த அம்சமே. இதில் சந்தேகமில்லை.

மற்றொன்று, அது பாராட்ட முடியாததாக அமைய லாம்; காலப் போக்கில் தோன்றி மறைவதாக இருக்கலாம். இதற்குப் பதவி உதாரணம். இது போன்ற காரியத்தில் கூறப்படும் பாராட்டுரை, பச்சைப் பசுமையான புற்பூண்டு களைப் பார்த்துப் பாராட்டுவது போன்றது. பாராட்டுரைக் குத் தகுந்த சிறப்பம்சம் உன்னிடம் இருந்தாலும் அது குறித்து நீ இன்பமடையக் கூடாது. ஏனெனில், உனக்கு மரணத்தின்போது ஏற்படப்போகும் முடிவைப் பற்றி இப்போது தீர்மானமாக ஒன்றும் சொல்ல முடியாதல்லவா?

அறிவு சிறப்பம்சம்தான். அறிவின் காரணமாக மனிதன் இறைவனை அணுகுகிறான். இதனால் அவன் தன் அறிவு குறித்து ஆனந்தமடைய வழியுண்டு; ஆனால் மரணத்தின் போது அவனுக்குத் தீய முடிவு ஏற்பட்டுவிட்டால் அவன் அறிவு எதற்கும் பயன்படாது போய்விடுமே! இது குறித்து அவன் கவலைப்பட வேண்டும். உலகிலுள்ள சகல இன்பங்களையும் உதறிவிட்டு அவன் தன் மரண முடிவைப் பற்றிக் கவலைப்பட வேண்டும். உலகம் என்பது துக்கமும், துயரமும் நிறைந்த ஒரு வீடு. அதில் இன்பத்திற்கும், மகிழ்ச்சிக்கும் இடமில்லை.

உன்னிடம் சிறப்பம்சம் இருப்பது கண்டு நீ இன்ப மடையகிறாய். அந்த சிறப்பம்சம் இறைவனின் பேரருளா லேயே உனக்குக் கிடைத்திருக்கிறது. எவருடைய



பாராட்டுரையும் உனக்கு அதை அளிக்கவில்லை. உன் சிறப்பம்சம் தோன்றிய பிறகே உன்னை மக்கள் பாராட்டு கிறார்கள். எனவே பாராட்டுரையைக் கேட்டு நீ மகிழக் கூடாது. எவருடைய பாராட்டுரையாலும் உனக்கு எந்தத் தன்மையும் அதிகரித்துவிடப் போவதில்லை.

உன்னிடம் சிறப்பம்சமே இல்லாதிருக்கும்போது பாராட்டுரையைக் கேட்டு நீ மகிழ்ந்தால் அது பைத்தியக் காரத்தனம்.

ஒரு மனிதனை மற்றவர்கள் கிண்டல் செய்கிறார்கள். ''சுப்ஹானல்லாஹ்! அவன் விதவிதமாகவல்லவோ வாசனைத் திரவியங்களை உபயோகிக்கிறான்!'' என்று கூறுகிறார்கள். அதே சமயத்தில் அவன் உடலினுள் தேங்கிக் கிடக்கும் அருவருப்பான பொருள்களையும் துர்நாற்றம் நிறைந்த அங்கங்களையும் அவர்கள் அறிவார்கள்.

இதேபோன்று உன்னைச் சிலர் பாராட்டுகிறார்கள். அதைக் கண்டு நீ மகிழ்கிறாய். ஆனால் உன்னிடமுள்ள இழிகுணங்களையும் துர்நாற்றம் நிறைந்த தன்மைகளையும் இறைவன் பார்த்துக் கொண்டிருக்கிறான். இப்படியிருக்க பாராட்டுரையைக் கேட்டு மகிழ்வது கலப்பற்ற மடமை யல்லாவா? உன்னைப் பாராட்டியவன் உண்மையைக் கூறி யிருப்பின், பாராட்டத் தகுந்த நல்லம்சத்தைக் கொடுத்த இறைவனின் பேரருளை எண்ணி மகிழ வேண்டும்.

பாராட்டுரையின் காரணமாக மனிதன் தன்னிடம் பிறர் உள்ளத்தை வசப்படுத்தும் ஆற்றல் இருப்பதாக அறிகிறான். இந்தச் சக்தியை எண்ணி அவன் மகிழ்கிறான். இந்தச் சக்தியின் காரணமாக இன்னும் பலருடைய உள்ளத்தை வசப்படுத்த முடியும். இந்தச் சக்திதான் இரண்டாவது

காரணம். இந்தக் காரணத்தை எப்படி அகற்றுவது என்பதை முன்னர் விவரித்து விட்டேன். மக்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்காத நிலைமையை உண்டாக்கிக் கொண்டு இதற்குப் பரிகாரம் தேடலாம். இறைவனிடம் அந்தஸ்தடைய விரும்புவதுதான் உயர்ந்ததே தவிர மக்களிடம் மதிப்படைவதல்ல. மக்களிடம் ஏற்பட்டிருக்கும் அந்தஸ்து குறித்து நீ மகிழும்போது இறைவனிடம் உனக்கு ஏற்பட்டிருக்கும் அந்தஸ்து மறைந்து போய்விடும். இப்படியிருக்க பாராட்டுரையில் நீ எப்படி மகிழ முடியும்?

ஒரு மனிதனின் நாவைத் தன் புகழைப் பாடுமாறு செய்து விட்டதன் சக்தி குறித்து இன்பமடைகிறான் மனிதன். இந்தச் சக்தி மூன்றாவது காரணம். ஆனால், இது தோற்றமளித்து மறைந்து போகும் தன்மையுடையது. இது நிலையாக நிற்க முடியாது. எனவே இது குறித்து மகிழவும் முடியாது. நியாயப்படிப் பார்க்கப்போனால் பாராட்டுரையைக் கேட்டு வருந்த வேண்டும்; வெறுப்படைய வேண்டும்; கோபப்பட வேண்டும்; முன்னோர்கள் பலர் இப்படித்தான் செய்தார்கள். ஏனென்றால் பாராட்டுரையால் பாராட்டப்பட்டவனுக்கு ஏற்படும் இடையூறுகள் மகத்தானவை. இவற்றை 'நாவின் விபரீதங்கள்' என்ற நூலில் விளக்கியிருக்கிறேன்.

''பாராட்டுரையைக் கேட்டு ஒருவன் மகிழ்ந்தால் 'ஷைத்தானை'த் தன் வயிற்றிலும் நுழைவதற்கு அவன் அனுமதித்து விட்டான்'' என்று சிலர் கூறினார்கள்.

இன்னும் சிலர் கூறினார்கள்: ''உன்னை ஒருவன், 'நல்லவன்' என்று கூறினால் அவன் உன் அன்பிற்குரியவனாக மாறிவிடுகிறான். உன்னைக் 'கெட்டவன்' எனக் கூறியவனைவிட, அவனை நீ அதிகமாய் விரும்புகிறாய்.



ஆனால் இறைவன்மீது ஆணையிட்டுக் கூறுகிறேன் நீ கெட்டவன்தான்!''

ஒரு சமயம் திரு நபியவர்களின் முன்னிலையில் ஒருவர் மற்றொருவரைப் பாராட்டினார்.

திரு நபியவர்கள் பதிலிறுத்தார்கள்: ''நீர் அவரைப் பாராட்டுகிறீர். அவர் இந்த இடத்தில் ஆஜராயிருந்து உம் பாராட்டைக் கேட்டு மகிழ்ந்து, அந்த மகிழ்ச்சியிலேயே அவர் மரணிப்பாராயின் அவர் அவசியம் நரகத்திற்குச் செல்வார்!''

மற்றொரு சமயம் பாராட்டுபவர் ஒருவருக்குத் திரு நபியவர்கள் கூறினார்கள்: ''அவரை நீர் பாராட்டி அவருடைய முதுகெலும்பை உடைக்கிறீர். அவர் இந்தப் பாராட்டுரையைக் கேட்பாராயின் உலக அழிவு நாள்வரை அவரால் வெற்றியைக் காணமுடியாது!''

மீண்டும் கூறினார்கள்: ''அறிந்துகொள்ளுங்கள்! நீங்கள் ஒருவருக்கொருவர் பாராட்டிக் கொள்ளாதீர்கள்! பாராட்டுபவர்களைக் கண்டால் அவர்கள் முகத்தில் மண்ணை வாரி எறியுங்கள்!''

இதனால்தான் திரு நபித் தோழர்கள் பாராட்டுரையைக் கேட்டு பெருந்துன்பம் அடைந்தார்கள். புகழ் பெற்ற நான்கு 'கலீபா'க்களில் ஒருவர் ஒரு நண்பரிடம் எதையோ ஒன்றைக் கேட்டார்.

''முஸ்லீம் பெருமக்களின் தலைவர் அவர்களே! தாங்கள் என்னைவிட மேலானவர்கள்....'' என்றார் நண்பர். இந்தப் பாராட்டுரையைக்கூட கலீபா அவர்கள் விரும்பவில்லை. கோபம் கொண்டுவிட்டார்கள்.

''என்னை உயர்ந்தவன் என்று கூறுமாறு உம்மிடம் நான் வேண்டிக்கொள்ளவில்லையே!'' என்றார்களாம்.

சிலர் தாங்கள் பாராட்டப்பட்டதற்காக இறைவனிடம் இவ்விதம் இறைஞ்சினார்கள்: ''இறைவனே! உன் அடியான் உன் வெறுப்பைக் கொட்டிக் கொள்கிறான்...''

மக்களின் பாராட்டை விட்டு விலகியிருப்பதற்காகவே அவர்கள் பாராட்டை வெறுத்தார்கள்.ஏனெனில், மக்களால் பாராட்டப்பட்டவர்கள் இறைவனின் வெறுப்புக்கு இலக்கானவர்களே. உண்மையில் பாராட்டுக்குரியவன் இறையண்மையைப் பெற்றவனே. உண்மையில் நிந்தனைக்குரியவன், இறைவனை விட்டு விலகிச் சென்றவனே. இவன் நரக வாழ்க்கையில் உழல வேண்டியவன். இப்படி நரக நெருப்பிற்கு இழுத்துச் செல்லும் அம்சம் குறித்து எப்படி மகிழ முடியும்? சுவன வாழ்க்கை கிடைக்குமாயின் மகிழலாம் - இறைவன் அளித்த பெரும் பேற்றை எண்ணி.

ஏனெனில் அவன் காரியம் மக்கள் வசமில்லை. அவனுடைய உணவும் அவனுடைய வாழ்க்கை வரையறையும் இறைவனின் கையிலிருக்கின்றன. இதை ஒருவன் அறிந்து கொண்டுவிட்டால் அவன் மக்களின் பாராட்டையோ, நிந்தனையையோ பொருட்படுத்த மாட்டான். மார்க்கத்திற்கு அவசியமான விஷயங்களின் பால் அவன் கவனம் முழுதும் திரும்பிவிடும். இறைவனே நேர்மைக்கு வழி வகுப்பவன்!

❑ ● ❑

# 11. இழிவை வெறுக்காதே!

ஏதன் காரணமாக மனிதன் புகழை விரும்புகிறானோ, அதன் எதிர்ப்பதத்தின் காரணமாகவே அவன் நிந்தனையை வெறுக்கிறான் என்பதை மேலே விவரித்து விட்டேன். அந்த விளக்கத்திலிருந்தே இந்த மனப் பிணியை அகற்றுவதற்குரிய முறையும் தெளிவாகிவிட்டது.

என்றாலும், அந்த முறையை இங்குச் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். ஒருவன் உன்னை நிந்திக்கும்போது அவன் மனநிலையை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. அவன் உண்மையிலேயே உன்னிடமுள்ள குறைகளைக் கூறியிருக்கலாம். உன்மீது அவனுக்கு அன்பிருப்பதால் உபதேச முறையில் உன்னை அவன் நிந்தித்திருக்கலாம். அதைக் கேட்ட பிறகாவது நீ திருந்தலாமல்லவா?

2. உண்மையில் உன்னிடமுள்ள குறையைக் கூறினாலும் உன்னைத் துன்புறுத்தும் எண்ணத்துடன் அவன் நிந்தித்திருக்கலாம்.

3. உன்னிடமில்லாத குணங்கள் குறித்து அவன் நிந்தித்திருக்கலாம்.

இந்த மூன்று தன்மைகளையும் விரிவாக ஆராய்வோம்.

உன்னைத் திருத்தும் நோக்கத்துடன் உன் குறைகளை ஒருவன் கூறி நிந்திக்கும்போது அவன்மீது நீ கோபம் கொள்ளக் கூடாது. அவன்மீது நீ பிரியம் கொள்ள வேண்டும். ஏனெனில், உன் இழி குணங்களை உனக்குக் காட்டியவன் உனக்கு வரப்போகும் அபாயத்தைக் காட்டியவனாவான். அந்த ஆபத்திலிருந்து நீ தப்பித்துக் கொள்ள வேண்டும். நியாயப்படிப் பார்த்தால் உன்னை நிந்தித்தவனை நீ அன்போடு வரவேற்க வேண்டும். உன் இழி குணங்களை இயன்றவரை அகற்ற முயலவேண்டும்.

இதை விட்டுவிட்டு, உன்னை நிந்தித்தவன்மீது வெறுப்படைவதும் கோபம் கொள்வதும் கலப்பற்ற மடைமையே!

மனத்தைப் புண்படுத்தும் எண்ணத்துடன் நீ நிந்திக்கப்பட்டாலும் அதில் உனக்குப் பயனில்லாமல் போய்விடாது. அவன் உன்னை எந்த நோக்கத்துடன் வேண்டுமானாலும் நிந்திக்கட்டும். அந்த நிந்தனையின் காரணமாக நீ உன் குறைகளை உணர்ந்துகொண்டு விட்டாயல்லவா? உன் குணங்களை அறியாதிருக்கலாம், அல்லது அவற்றை மறந்திருக்கலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் மற்றவனின் நிந்தனையால் அந்தக் குணங்கள் உன் மனத் திரையில் தோன்ற முடியும்.

உன் துணியில் அருவருக்கத்தக்க பொருள் ஒட்டிக் கொண்டிருக்கும்பொழுது உன்னால் அரச சபையினுள் பிரவேசிக்க முடியுமா? அப்படி உன் துணி அருவருக்கத்தக்க முறையில் இருப்பதை அறியாத நீ என்ன செய்ய வேண்டும்? ''அருவருப்பு நிறைந்தவனே! சுத்தமாய் இரு!'' என்று ஒருவன் கூறி உன் அசுத்த நிலையைச் சுட்டிக் காட்டினால் நீ உண்மையில் சந்தோஷப்பட வேண்டுமே தவிர வருந்தக் கூடாது; அவனுடைய நிந்தனையை நீ பேராவலுடன் வரவேற்க வேண்டும்.



உன் மனத்தைத் துன்புறுத்தும் எண்ணத்துடன் உன் விரோதி ஒருவன் நிந்திக்கும்போது, அவன் குற்றம் செய்தவனாகிறான். நீயோ அதனால் பயனடைந்தவனாகிறாய். ஆகவே அவனது நிந்தனையைக் கண்டு வருந்தக் கூடாது.

உன்னிடம் இல்லாத குறையை ஒருவன் கூறி நிந்திப்பதாகவே வைத்துக் கொள்! இந்தச் சமயத்தில் நீ வருந்தக் கூடாது. மூன்று காரியங்கள் குறித்து நீ சிந்திக்க வேண்டும்.

1. அவன் நிந்திக்கும் இழி குணம் உன்னிடம் இல்லாவிட்டாலும் அதையொத்த பல இழி குணங்கள் உன்னிடம் இருக்கத்தான் செய்கின்றன. உன் இழி குணங்கள் பலவற்றை இறைவன் மறைத்து வைத்திருக்கிறான். இறைவனுக்கு நீ நன்றி செலுத்த வேண்டும். ஏனெனில், அந்த இழி குணங்களை அவன் உன் விரோதிக்குக் காட்டிக் கொடுக்கவில்லை. இருப்பதை மறைத்துவிட்டு இல்லாததைக் கூறச் செய்துவிட்டான் அவன்.

2. இந்த நிந்தனையை நீ உன் குற்றங்கள் பலவற்றிற்குத் தண்டனையாகக் கொள்ள வேண்டும். நீ செய்யாத குற்றம் பிரஸ்தாபிக்கப்படும்போது நீ செய்த குற்றங்களை விட்டுப் பரிசுத்தமானவன் போன்று விளங்குகின்றாய். உன்னைப் பற்றி அவதூறு பேசுபவன் உனக்கு நன்மை செய்தவன். உன்னை பாராட்டியவன் உன் முதுகெலும்பை நொறுக்கியவன். ஆனால் உன் முதுகெலும்பு நொறுங்குவது குறித்து மகிழ்கிறாய், உனக்கு வரும் நன்மை குறித்து வருந்துகிறாய். இறையண்மையை நீ விரும்பினால் நிந்தனையையும் விரும்ப வேண்டும். நிந்தனையால் இறையண்மைக்குரிய வழி திறக்கிறது.

*3.* உன்னை நிந்தித்தவன் வீணாகிறான். இல்லாததைக் கூறி அவதூறு பேசுவதிலேயே அவன் மாண்டு போகிறான். இறைவனின் கோபத்திற்கு இலக்காகிறான். அவனுடைய நிந்தனையைக் கேட்டு நீயுமா அவன்மீது சினமுற வேண்டும்? இறைவன் தான் அவன்மீது சினம் கொண்டிருக்கிறானே! ''ஆண்டவனே அவனைப் படுகுழியில் தள்ளு வாயாக!'' என்று இறைஞ்ச வேண்டியதில்லை.

மாறாக, ''இறைவனே! அவனைத் திருத்துவாயாக! அவன்மீது உன் அன்பைச் செலுத்துவாயாக!'' என்று இறைஞ்ச வேண்டும். இப்படித்தான் திரு நபியவர்கள் செய்தார்கள்.

உஹத் யுத்தத்தின்போது அரேபிய மக்கள் பல தவறுகள் செய்தார்கள். ஹம்ஸா (ரலி) அவர்களை வெட்டி வீழ்த்தினார்கள். திரு நபியவர்களின் பல் ஒன்று தெறித்து விழுந்தது. இந்தச் சமயத்தில் திரு நபி அவர்கள், ''இறைவனே! அவர்களுக்கு நேர்வழி காட்டு! அவர்கள் அறியாத மக்கள்...'' என்று இறைஞ்சினார்கள்.

மக்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்காத நிலையில் நீ இருந்தால், இதில் நீ பூரண வெற்றியடையலாம். அவர்களின் நிந்தனை அப்படி ஒன்றும் உன்னைப் பாதித்து விடாது. உள்ளதைக் கொண்டு போதுமாக்கிக் கொள்வது தான் மார்க்கத்தின் அடிப்படை. இதனால் பதவி மோகமும் பொருளாசையும் நீங்கும். பதவியையும் பொருளையும் விரும்புபவர்கள், பாராட்டை விரும்புபவர்கள் மார்க்கத்தை இடித்து நொறுக்கியே தீரவேண்டும். அதன் பிறகுதான் அவற்றை அவர்களால் அடைய முடியும். இவர்கள் விஷயத்தில் மார்க்கம் என்பது நல்ல முறையில் இருப்பது சாத்தியமில்லை.

# 12. மக்களின் மனப்பான்மை

மக்களை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்:

**முதற் பிரிவினர்:** இவர்கள் பாராட்டுரையைக் கேட்டு மகிழ்வார்கள். பாராட்டியவனுக்கு நன்றி செலுத்துவார்கள்; நிந்தனையைக் கேட்டுச் சினமுறுவார்கள்; நிந்தித்தவனை வெறுப்பார்கள். அவனைத் திருப்பி நிந்திப்பார்கள் - அல்லது அதை விரும்புவார்கள். இது பெரும்பாலான மக்களின் நிலை. இந்த நிலை தவறான செயல்களின் கடைசி எல்லை.

**இரண்டாம் பிரிவினர்:** இவர்கள் நிந்தனையைக் கேட்டு மனத்திற்குள் வெறுப்படைந்தாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ள மாட்டார்கள். நிந்தித்தவனை இவர்கள் திட்ட மாட்டார்கள்; துன்புறுத்த மாட்டார்கள். பாராட்டைக் கேட்டு இவர்கள் உள்ளுக்குள் மகிழ்வார்கள்; பாராட்டியவனை விரும்புவார்கள். ஆனால் அதை வெளியில் காட்டிக் கொள்ள மாட்டார்கள். இது சிறப்பான அம்சமல்ல. என்றாலும், முதற் பிரிவினரோடு இணைத்துப் பார்க்கும்போது இவர்களை உயர்ந்தவர்கள் என்று குறிப்பிடலாம்.

**மூன்றாம் பிரிவினர்:** இவர்கள் பரிபூரணத் தன்மையுடையவர்கள்; முதல் தரமான சிறப்புடையவர்கள். இவர்கள் பாராட்டியவனையும் நிந்தித்தவனையும் சமமாக மதிப்பார்கள். நிந்தனையால் வருந்தமாட்டார்கள்; பாராட்டால்

மகிழமாட்டார்கள். ஆனால், இந்தப் பிரிவினர் சில சமயங்களில் ஏமாற்றமடைந்து விடுவதுண்டு. எனவே இவர்கள், மேற்குறிப்பிட்ட சிறப்பம்சத்திற்குரிய அறிகுறிகள் காணப்படுகின்றனவா என்று ஆராய வேண்டும். நீண்ட நேரம் பாராட்டப்படும் போதும் நீண்ட நேரம் நிந்திக்கப்படும் போதும் இவர்கள் ஒரேவித உணர்ச்சியை அடைய வேண்டும்.

நிந்தித்தவனின் விஷயத்தில் இவர்கள் காட்டும் அக்கறையைவிட அதிகமாகப் பாராட்டியவனின் விஷயத்தில் அக்கறை காட்டக்கூடாது. நிந்தித்தவனின் மரணத்தால் ஏற்படும் துயரம் பாராட்டியவனின் மரணத்தால் ஏற்படும் துன்பத்தைக் காட்டிலும் குறைந்ததாக இருக்கக் கூடாது. பாராட்டியவனுக்கு ஏற்பட்ட இடையூறுகளால் தோன்றும் கவலை, நிந்தித்தவனுக்கு ஏற்பட்ட இடையூறுகளால் தோன்றும் கவலையைவிட அதிகமாய் இருக்கக் கூடாது.

இவ்வாறு இவர்கள் எல்லா விஷயத்தையும் சமமான மனப்பான்மையோடு கவனிக்க வேண்டும். அதன் பின்னர் இவர்கள் உயர் அந்தஸ்து அடைய முடியும்.

ஆனால் இந்த அந்தஸ்து பெரும்பாலோரிடம் கிடையாது. அவர்கள் தங்களிடம் மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் காணப்படுகின்றனவா என்று ஆராயாத காரணத்தால் வீணாகிறார்கள்.

சில சமயங்களில் பக்தர் ஒருவர், தம் உள்ளம் நிந்தித்தவனைவிட, அதிகமாகப் பாராட்டியவனை விரும்புகிறது என்பதை உணர்கிறார். 'ஷைத்தான்' இதற்குத் தூண்டுகோலென நிற்கிறான்.

''நீ இறைவனை வணங்குகிறாய். எனவே உன்னை நிந்தித்தவன் பாவியாகிறான். உன்னைப் பாராட்டியவன் இறைவனின் அன்புக்கு உரியவனாகிறான். இவ்விருவரையும் ஒரே விதமாக மதிக்க வேண்டியதில்லை. நிந்தித்தவன் குற்றவாளி. அவனை நீ வெறுக்கத்தான் வேண்டும். இதில் தவறில்லை'' என்று உபதேசிக்கிறான்.



இது தவறு. அந்த பக்தர் சிந்தித்துப் பார்ப்பாராயின் உண்மையை உணர்ந்து கொள்ள முடியும். நிந்திப்பது குற்றமாயிருந்தாலும் அதைவிடக் கொடிய குற்றங்களைச் செய்தவர்கள் மக்களின் மத்தியில் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் அவர் வெறுப்பதில்லையே! பாராட்டியவன் நன்மையைச் செய்தாலும் அவனிடம் இகழத் தகுந்த அம்சங்கள் கண்டிப்பாய் இருக்கும். அப்படியிருக்க அவன்மீது எப்படி அன்பு செலுத்த முடியும்?

'ஷைத்தான்' விடமாட்டான். மனத்தினுள் புரட்சியை உண்டாக்குவான். இறைவனை விட்டு விலகியோடச் செய்வான். ஆகவே மனத்தின் தீங்குகளையும் 'ஷைத்தானி'ன் இடையூறுகளையும் நன்கு அறிந்துகொள்ள வேண்டும். இல்லையேல் அவர் செய்யும் பெரும்பாலான வணக்கங்கள் வீண்வேலைகளாக முடிந்துவிடும். அவற்றின் காரணமாக அவர் உலக இன்பங்களைத் துறப்பதோடு மறுமையிலும் கைசேதமடைய நேரிடும்.

இத்தகையவர்களைப் பற்றித்தான் இறைவன் இவ்விதம் கூறுகிறான்; ''நல்ல காரியங்களைச் செய்து வீணானவர்களைப் பற்றி உங்களுக்குக் கூறுகிறோம். உலக வாழ்க்கையில் அவர்களின் முயற்சி பலிக்கவில்லை. தாங்கள் நற்காரியம் செய்து கொண்டிருப்பதாக அவர்கள் எண்ணுகிறார்கள்!''

**நான்காம் பிரிவினர்:** இவர்கள் பாராட்டை வெறுப்பார்கள். பாராட்டுபவனை விரட்டுவார்கள். ஏனெனில் பாராட்டுரையால் பல விபரீதங்கள் நிகழ முடியும் என்று இவர்களுக்குத் தெரியும். நிந்திப்பவனை இவர்கள் விரும்பு

வார்கள். ஏனென்றால் அவன் இவர்களின் குறைகளை எடுத்துரைப்பவன். ''பாராட்டுரையைக் கேட்டு வெறுப்படைவது உயர் குணம்'' என்று திரு நபியவர்கள் கூறியுள்ளார்கள்.

நம்மைப் போன்றவர்கள் மேற்குறிப்பிட்ட இரண்டாவது நிலையை அடைய ஆவல் கொள்ளலாம். பாராட்டுரையைக் கேட்டு மகிழ்ந்தாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாதிருப்பது, நிந்தனையைக் கேட்டு வருந்தினாலும் அதை வெளியில் சொல்லிக் கொள்ளாதிருப்பது ஆகியவை இரண்டாவது நிலையின் சாராம்சம். இந்த நிலையை நாம் அடையலாம்.

ஆனால் நிந்தனையையும் பாராட்டையும் சமமாக மதிக்க வேண்டிய மூன்றாவது நிலையை அடைய நாம் ஆவல் கொள்ள முடியாது. அதற்குரிய அறிகுறிகள் நம்மிடம் இருக்கின்றனவா என்று ஆராயும்போது, ''இல்லை'' என்ற விடை கிடைக்கிறது. பாராட்டுபவனைக் கௌரவிக்க நம் உள்ளம் பாய்கிறது. அவன் காரியங்களை முடிப்பதற்கு ஆர்வம் கொள்கிறது. நிந்திப்பவனைக் கௌரவப்படுத்துவதும் அவன் காரியங்களை முடிப்பதும் நமக்குச் சற்றுக் கடினமாகத் தோன்றுகின்றன. இப்படி இருக்கும்போது அவை இரண்டையும் நம்மால் எவ்வாறு சமமாக மதிக்க முடியும்? எப்படி அதைச் செயல் முறையில் காட்ட முடியும்?

ஒருவன் பாராட்டுபவனையும் நிந்திப்பவனையும் சரிசமமாக மதிக்கும் மனப்பான்மையைப் பெற்று விட்டால், அதைச் செயல்முறையில் அவன் நிரூபித்துக் காட்டினால், அவனே இக்காலத்தில் மக்களுக்கு நேரிய வழியைக் காட்டி அவர்களை அதில் நடாத்திச் செல்லும் தகுதியுடையவன்.

❑ ● ❑